ரெஜிஸ்டர்ட் சீ. நெ 237

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு—திருக்குறள்.

தொகுதி 6. } 1907வருஷ டிசம்பர்மீ { பகுதி 12.

விஷயங்கள்.


காங்கிரெஸ் மகாசபை—ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள்

கலிமகுடன் சரித்திரம்—ம. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

ஸ்ரீ மீனாக்ஷிஸ்தோத்திரம்—பி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.

திருஉருமாமலைச்சிலேடை வெண்பா } மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள்.

புஸ்தகக்குறிப்பு—பத்திராதிபர்.

புதுவை ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் சரமகவி—ஓர் அன்பன்



சொந்தக்காரர்—மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

பத்திராதிபர் } எஸ். சாமிநாதையர்.
மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

மதுரை விவேகபாநு அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

வருஷசந்தா ரூபா [illegible] [பத்திரிகை 1-க்கு [illegible]

## புத்தகக்குறிப்பு.

# சுதேச கீதங்கள்.

ஸ்ரீ சுப்பிரமணியபாரதியவர்களால் வெளியிடப்பட்ட சுதேச கீதங்களை ஒருமுறைக் கிருமுறையும் மும்முறையும் படித்துப் பெருங்களிப்படைந்தோம். பயில்தொறும் பயில்தொறும் புதிது புதிதாய் இன்பம் பெருகுகின்றது. செந்தமிழ் மணம் செவ்வனே பொருந்தியுள்ளது. சுதேசக்கிளர்ச்சி, சுயராஜியம் என்னும் வான பயிர்களைத் தமிழர் மனத்தே வளர்ச்செய்வதற்கு இவைகள் இன்றியமையாத கதிரொளிபோன் றிலங்குகின்றன. ஒற்றுமையோம்பல் சுயப்பிரயோஜனம் வேண்டாது தனக்கென உழைத்தல் தகாதென்று பிறர்க்கென உழைக்கும் பெருந்தன்மை தேசம் நன்மை பெறுகவென்று துக்கஞ் சகித்தல் தாய்மீது இடையறா அன்பு முதலிய உத்தம அறங்கள் பலவும் கீதங்களின் இடையிடையே பார்த்தோர் வியக்கும் வண்ணம் செறிந்து கிடத்தல் படிப்பவர்க்கினிது விளங்கும். அரியகல்வியும் பெரிய உழைப்பும் உடைய ஆன்றோர் உரைத்த ஆப்தவாக்கியங்களனேகம் எளிதிற் சாதாரண மாந்தரும் அறிந்துகொள்ளும்படி தேனினும் இனிய செந்தமிழ்க் கீதங்களால் வெளியிட்டது தமிழுலகத்துக்குப் புரிந்த பேருதவியென்று யாவராலும் கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

முப்பதுகோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பதுகோடி முழுமையும் வீழ்வோம்

என்ற கீதத்தைப்பாடக்கேட்டும் தன் தாய்த்தேசத்தினிடத்து அன்பு சுரக்கப்பெறாதிருப்பரேல் அவரிருந்தாலென் இறந்தாலென்? இங்கிவர் மனவுறுதியும் தேசத்தின் மீதுள்ள ஆர்வமும், தன்னாசை அறவும் வலிதாய் அதனால் வரும் கட்டங்களைச் சகிக்கும் ஆற்றலும் மேற்காட்டிய இரண்டுவரிகளிலும் பொலிந்து மிகவும் அழகுசெய்கின்றன. மாதாவைப் பழித்தல், கிருஷ்ணார்ஜுன தரிசனம் முதலிய கீதங்கள் தொட்ட மணற்கேணிபோன்று “அறிதோ றறியாமை யென்னும்” மறைப் பொருளையினிது விளக்குகின்றன.

உ
குமரன் துணை.

# விவேகபாநு

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6. } 1907ஆம் டிசம்பர்மீ { பகுதி 12.

## காங்கிரெஸ் மகாசபை.

சென்ற 22-வருஷங்களாகக் கட்சிப் பிரதிகட்சிகளின்றிக் கூடிவந்த மகாசபை இவ்வருஷம் நடவாமல் நின்றுபோன விஷயம் சுதேசாபிமானிகள் எவரும் அறிவர். எவ்வளவோ லட்சக்கணக்கான பணஞ் செலவழிக்கப்பட்டு வருஷக்கணக்காய் நடந்துவந்த இக்காங்கிரெஸ் இவ்வருஷம் பிளவுபட்டதற்குக் காரணம் பல பலவாறு கூறுவர். பழைய கட்சியாரிடம் சென்று இதற்குக் காரணம் கேட்பின், அவர்கள், புதுக்கட்சியார் அறிவுகெட்டு மெய்மறந்து மதியிழந்து பிடிவாதமும் வைராக்கியமும் மேலிட்டோராய் நடந்துகொண்டதாலே காங்கிரெஸ் நாசமுற்றதென்பர். புதிய கட்சிக்காரர்களைக் கேட்டாலோ, அவர்கள், பழைய கட்சிக்காரர்கள் பணக்கொழுப்பினாலும் அடிமைக்குணத்தினாலும் தாய் நாட்டு விரோதிகளுடன் அந்தரங்கம் வைத்துக்கொண்டு அவர்களுடைய துர்ப்போதனையைக்கேட்டுத் தமது ஆலோசனையைக் கலவாமல் அலட்சியஞ்செய்தும் தம்மீது கவர்ன்மெண்டாரிடம் கோட்சொல்லியும் "கெடுவான் கேடுநினைப்பான்" என்ற பழமொழிக்கேற்பத் தாமே தம்தலையில் மண்ணைவாரிப்போட்டுக்கொண்டு காங்கிரஸையும் கொலைசெய்

துவிட்டனர் என்க் கூறுகின்றார்கள். ஆயினும் "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணது" ஆகவின், இதுகாறும் நமக்கெட்டியுள்ள விஷயங்களைக்கொண்டு உண்மையை நடுநிலைமையில் நின்று நன்காராய்வாம்:

காங்கிரெஸ் கூடுவதற்குச் சிலதினங்களுக்கு முன்னே இந்திய ராஜாங்கக் காரியதரிசியாகிய மிஸ்டர் மார்லி "நாம இந்திய இராஜாங்கவிவகாரங்களில் பழையகட்சியாரை நமதுசார்பில் இழுத்துக்கொள்ளாமல் இருக்கக்கூடாது" என்று குறிப்பிட்டதைப் பத்திரிகை வாயிலாகப் படித்தறிந்த பழைய கட்சிக்காரர்களுக்கு உச்சிகுளிர்ந்துவிட்டது. அவர்கள் மிஸ்டர் மார்லியின் வார்த்தை "இடுக்கண் மேன்மேல் அடுக்கும பொருட்டுச் சிமிட்டிச் சிமிட்டிச் சிற்றொளி காட்டி இட்டுச்செல்லும் துட்டத்தீப்பேய்" எனக்கொள்ளாது அப்பேச்சிலேயே சிக்கி, ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய காங்கிரஸ் சபை கூடும் கடைசி நிமிஷம் வரை காங்கிரெஸில் நிறைவேற்றப்படவேண்டிய விஷயங்களை புதுக்கட்சியார்க்குத் தெரியாமலே மறைத்துவிட்டுப் பிற்பாடு அவற்றைத் தமக்குத் தோன்றியவாறு "பாஸ்" பண்ணிவிடலாம் என்ற முழு நம்பிக்கையுடனும் இருந்தார்கள். ஆயினும் "கழிமுடைப் புன்புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும் சேயார் முகத்துச் சென்றுதைப்பதுபோல் தெய்வம் பறையறைந்தாங்குப் பழைய பழைய கட்சியாரின் தீயநோக்கங்கள் ஒடிப்பரக்கலாயின. ஆதலின் புதுக் கட்சியார்கள் அடாத முறைகேடான இச்செய்கைக்கு இடங்கொடுக்கவில்லை. புதுக்கட்சியார்கள் பழைய கட்சியார்களை நல்வழிப்படுத்தப் பலவிதத்திலும் முயன்றும் பயன்படாமற்போயிற்று. பிடிவாதம் சாதித்த பழையகட்சியார்கள் காங்கிரெஸ் சபையில் புதுக்கட்சியார்கள் கலகஞ்செய்வார்கள் என்றஞ்சி மீன்பிடிக்கும் வலைபர்களையும் வேறு சில தெருப்போக்கிலிகளையும் குண்டர்களையும் தடிகள் கொடுத்து காங்கிரஸ் பந்தலுக்குள் மூலைக்கு மூலை உட்கார்த்தி வைத்திருந்தார்கள். அன்றியும் புதுக்கட்சியைச் சேர்ந்தோரும் திலகரிடம் முற்றிலும் விரோதம் கொண்டோருமாகிய சிலரால் ஜனங்களுக்குள்ளே ஆவேசத்தைக் கிளப்பும் பொருட்டுப் பின்வரும் கருத்தைகொண்ட துண்டுப் பத்திரிகை குஜ

ராத்தி பாஷையில் பிரசுரிக்கப்பட்டு வந்திருந்த டெலிகேட்டுகளுக்கும் மற்றுமுள்ளோர்களுக்கும் கொடுபட்டது. அதிற் கண்ட விஷயமாவது:—

"கிளம்புங்கள்! கிளம்புங்கள்! சூரத்தார்களே! காலம் வந்துவிட்டது. நீங்கள் செய்து தீரவேண்டிய தொன்றைக் கவனியுங்கள். உங்களையெல்லாம இழிவுக்குட் படுத்தக்கூடிய சில முயற்சிகளிலிருந்து விடுவித்துக்கொள்ளுங்கள். "திலகர் கேஸரிப் பத்திரிகையிலே குஜராத்திகள் மீது சுமத்தியிருக்கும் அவதூறுகளை யெல்லாம் நம்முடைய "குஜராத்தி" பத்திரிகையிலே வெளிப்படையாய் எடுத்து எழுதியிருக்கிறது. ஆனால் ராவாஜி என்ற இடத்திலே செய்த பிரசங்கத்திலே, திலகர், தான் அவ்வாறு ஒன்றுமே செய்யவில்லை யென்று சொல்லிவிட்டு, ஸூரத் ஜனங்களை ஒத்துழைக்கவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொண்டார். இக்கூபபகட்டுக்கெல்லாம் ஏமாறிபபோய்விடாதேயுங்கள்! அதே பிரசங்கத்திலே காங்கிரஸை உடைப்பதற்காகத் தாமும் தமது கக்ஷியாரும் அங்கேவரவில்லை என்று சொல்லிவிட்டு, நேற்றுக்காங்கிரஸிலே அந்தக்கக்ஷியார் போட்ட கூப்பாட்டையும் படுத்தினபாட்டையும் பார்த்தீர்களா? இனிமேல் நடக்கப்போகிற காங்கிரஸிலேயாவது, ஓ சூரத்தார்களே! உங்களுடைய வல்லமையைக் காட்டவேண்டும். அந்தக்கக்ஷியார் சச்சரவுசெய்யவொட்டாமல் தடுத்துவிடவேண்டும. ஸூரத்தார் ஸாதுக்களென்று திலகர் தமது பத்திரிகையில் கூறியதன் உண்மையான பொருள் தெரியுமா? நாம் ஆண்மையற்றவர்கள் என்று குறிப்பிடுவதாகும். ஆகையால் உங்களுடைய வல்லமை எங்கேபோய்விட்டது? சிவாஜி ஸூரத்தின்மேல் இருமுறை படையெடுத்து வந்து கொள்ளையடித்து விட்டுப்போனன். போகும்போது இன்னுமொரு முறை கொள்ளையடிக்கத் திரும்புவேன் என்று சொல்லிப்போனதை யறிவீர்களல்லவா? ஆனல் அப்படி அவன்வரவில்லை. அதற்குப் பதிலாக இப்போது திலகன் வந்திருக்கிறான். உங்களுடைய மூக்கையும் காதையும்சீவியெறிய வந்துவிட்டான்! இனிமேலாவது கிளம்புங்கள்!"

இவ்வளவு ஏற்பாடுசெய்தும் 26-டியன்று மகாசபை கூடிற்று.

ஜூத்துடபசரணைக் கமிட்டியார்கள் பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறிவரவேற்புப்பத்திரத்தைவாசித்ததும் டாக்டர்ராஸ்விகாரிகோஷ் காங்கிரஸ்சபை அக்கிராசனராகப்பிரேரேபிக்கப்பட்டார். இப்பிரேரேபணையை ஸ்ரீ பாபு சுரேந்திரநாதபானர்ஜி ஆமோதித்துப்பேச ஆரம்பிக்கவே புதிய கட்சியைச்சேர்ந்த வாலிபர் சிலர் "உட்காரும், உட்காரும்" என்று இரைச்சலிட்டு, "நீர் மிதுனபுரி கான்பரென்ஸில் போலீசு சேவகரைக்கொண்டுவந்த மகான் அல்லவா என்றும் கூவி ஆட்சேபிக்க நிதானக் கட்சியார்களும் இவர்களுக்குமேல் இரைந்து எதிர்க்கூச்சலிட்டனர். உடனே எல்லாரும் இரையவே இரைச்சல் பொறுக்கமாட்டாமல் காங்கிரெஸ் முதல்நாள் கலைபவேண்டிவந்தது. அன்று மாலையே ஸ்ரீ திலகர் தமது புதுக்கட்சியாரை ஒருங்கு கூட்டி தாம் காங்கிரெஸ்சபையைப் பலப்படுத்திமேன்மேலும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கமுடையவர்களாதலின் வீண் இரைச்சல் கூடாதென்றும் ஏனெனில் அவ்விரைச்சலால் காங்கிரஸ் நின்றுபோய்விட்டால் தமது நோக்கத்துக்கே விரோதமாகுமென்றும் ஆதலால் ஸ்ரீ பானர்ஜி பேசவந்தாலும் சரி மேடாவே பேசவந்தாலும் சரி வாய்திறவாமல் இருந்து கவனிக்கவேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

27-ஆ பகல் 1-மணிக்குக் கூடிய காங்கிரஸில் மீண்டும் சுரேந்திரநாதர் எழுந்து சுமார் ஒருமணிநேரம் டாக்டர் கோஷின் அக்கிராசனப் பிரேரேபணையை ஆமோதித்துப் பேசினர். புதுக்கட்சியார்களும் மௌனமாகவே இருந்து ஸ்ரீதிலகர் வாக்கைப் பரிபாலித்தனர். ஸ்ரீ பானர்ஜி பேசிமுடிந்ததும் ஸ்ரீ திலகர் பிரசங்கமேடைக்குச் சென்று பிரஸிடெண்டு நியமனத்தை ஆக்ஷேபித்து ஒரு அமெண்டுமெண்டு செய்யப்போவதாயும் அதற்கு அநுமதி தரவேண்டுமென்றும் உபசரணைக் கமிட்டித்தலைவராகிய மிஸ்டர் மால்வியைக் கேட்டுக்கொண்டனர். தாம இவ்வாறு அமெண்டுமெண்டு பிரேரேபணை செய்யப்போவதாய் ஸ்ரீ திலகர் திடீரென எழுந்து தெரிவித்து விடவில்லை. அவர் ஏற்கனவே அன்று காலையிலேயே இதனைப்பற்றிப் பழைய கட்சித்தலைவர்கட்குத் தகவல்கொடுத்து இருக்கிறார். தகவல் கொடுக்காமலே பிரேரேபிப்பதிற்கூடத் தவறேதுமில்லை. ஆயினும்

அவர் முன்பேயே அறிவித்துவிட்டது அவர் நேர்நெறிச் செல்பவர் என்பதை நன்கு விளக்குகின்றது. அப்படியிருக்கவும் பழைய கட்சியார் அவரைப் பேசவிடாது தடுத்து விட்டதுடன் மேட்டா எழுந்து ராஸ்பிகாரிகோஷை அக்ராஸநத்தில் எழுந்தருளச்செய்தனர். தெய்கதீம் டாக்டர் கோஷ் ஸ்ரீ திலகரைத்தடுத்து "நீர் பிரேரேபணை கொண்டுவந்திருப்பது ஒழுங்குக்குவிரோதம்" என்றார். அதற்கு ஸ்ரீ திலகர் "ஐயா தாங்கள் இன்னும் அக்கிராசனராக ஒழுங்குப்படி நியமனமாகவில்லை" என்று சொல்ல கோஷ் "நான்தான் பிரெஸிடெண்ட். 'நீர் இனிப்பேசக்கூடாது. உமது இடத்தில் போய் உட்காரவேண்டும்" என்று கூறினர். அதன்பேரில் திலகர் "நான் பிரதிநிதிகளிடம் கேட்கிறேன் அவர்கள் நியாயம் சொல்லட்டும். இதற்கிடையே என்னைப் பிடித்துத் தள்ளினாலொழிய நான் இங்கிருந்து நகரமாட்டேன் என்றார். அப்போது திடீரென்று ஒரு நாற்காலி நிதானக் கட்சியார் இருந்த இடத்திலிருந்து திலகருடைய தலையை நோக்கி விழுந்தது. அதனை அவ்வாறு விழவொட்டாமல் சிலர் தடுத்துவிட்டார்கள். உடனே புதுக்கட்சியார்கள் திலகரின் சரீரத்துக்கே அபாயம் வருமென்றஞ்சி ஸ்ரீ திலகரின் சம்ரக்ஷணையின் பொருட்டு மேடைக்கோடிவந்து அவரைச் சுற்றி வட்டமிட்டு நின்றார்கள். பிறகு தான் கலகம். பழையகட்சியார்கள் கொண்டுவைத்திருந்த போலீசுக்காரர்களும் தெருப்போக்கிரிகளும் புதுக்கட்சியார்களைத் தோன்றியபடி அடிக்கத்தலைப்பட்டார்கள். உடனே இருகட்சியாராலும் தடிகள் நாற்காலிகள் கைகள் தாராளமாய் உபயோகிக்கப்பட்டன. ஜோடுகள் சப்பாத்துக்கள் பறந்தன. மண்டைகள் அடிபட்டன. சிலர்க்குக் காயம் உண்டு. உடனே போலீசுக்காரர்கள் இருகட்சியாரையும் வெளிப்படுத்தினர். ஆதலின் இரண்டாநாளும் காங்கிரெஸ் நடைபெறாமற்போயிற்று. இவ்வாறு காங்கிரெஸ் கலைபடவே பழையகட்சியார்கள் பழைய காங்கிரெஸ் தீர்மானங்களைமாற்றிச்சர்க்கார் அதிகாரிகளை மெச்சக் கோட்பாடொன்றேற்படுத்தி அன்று மறுதினம் ஒரு கன்வென்ஷன் கூட்டினர். இக்கன்வென்ஷன் கூடுங்காலை அதனைச்சுற்றி ஆயுதபாணிகளாய் சிப்பாய்கள் நான்குபுறமும் பாராக் கொடுத்துநின்றனர். இற்க,

அதே தினத்தில் புதுக்கட்சியார்கள் "வந்தேமாதரம்" பத்திராதிபராகிய ஸ்ரீ அரவிந்த கோஷின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் மீட்டிங்கு கூடினார். அக்கூட்டத்தில்,

## காங்கிரஸ் நிலையைப்பற்றி ஸ்ரீமான் திலகர் செய்த உபந்நியாஸம்.

"பிளவு சேர்ந்துவிட்டது. நாம் எத்தனையோ கஷ்டம்பணம்செலவிட்டு, எவ்வளவோ காலம் பாடுபட்டுநடத்திவந்த காங்கிரஸ் சபை தகர்ந்துபோய்விட்டது. இரண்டுகட்சியாரும் சேர்ந்து கல்கத்தாவிலே சமாதானம் செய்துகொண்டதுபோல் இவ்வருஷம் செய்து கொள்ள முடியவில்லை. காங்கிரஸ்சபையைப் பின்புறமாகத் தள்ளிவிடவேண்டுமென்று சிலர் எண்ணங்கொண்டு விட்டார்கள். இதுவரையும் அடைந்திருக்கும் அபிவிருத்திக்கு மேலே நாம் சொல்லாவிட்டாலும் பின்னுக்கு வாங்காமலேனுமிருக்க வேண்டுமென்றுமற்றொரு கட்சியார் அபிப்பிராயப் பட்டார்கள். கவர்ன்மெண்டார்பலமான இம்சைமுறை தொடங்கி யிருக்கும் இக்காலத்தில் இருதிறத்தாரும் ஒன்றுசேர்ந்திருக்க வேண்டியது அவசிய மென்பதைச் சிலர் மறந்துவிட்டபடியினால் இந்தக்கேடு நேரிட்டது. காங்கிரஸ் சபையின் அபீஷ்டங்களையும், வழிகளையும் கவர்ன்மெண்டாரின் தற்கால விருப்பத்தின் நிலைமைக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்று சிலர் எண்ணமடைந்துவிட்டார்கள். பம்பாய் பிரமுகஸ்தர்கள் காங்கிரஸ் சபையைத் தங்கள் இஷ்டப்படியெல்லாம் ஆட்டிவைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டபடியால்இக்கேடு விளைந்தது.

பம்பாய் முகஸ்தியஸ்தர்கள் கவர்ன்மெண்டாரின் தற்கால விருப்பத்தின்படி காங்கிரஸ் அபீஷ்டங்களைக்குறுக்கவேண்டுமென்று நிச்சயித்து விட்டார்களென்பது எனக்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னுகவே விளங்கிவிட்டது. கவர்ன்மெண்டாரின் கோபத்துக்குப்பாத்திரப்பட்டாரென்ற காரணத்தின்பொருட்டாக, எப்போது லஜபத்ராயைக் காங்கிரஸ் தலைமைக்கு உதவமாட்டாரென்று தடுக்க ஆரம்பித்தார்களோ அப்போதே இன்ன மாதிரியான எண்ணங்கொண்டு இவர்கள் வேலை தொடங்கி யிருக்கிறார்களென்பது தெளிவாகிவிட்டது. பாரதஜாதியின் மஹாசபை சென்ற பொதுக்கூட்டத்தை

த்தி அந்த நிதானக் கட்சிக்கு மட்டிலும் சொந்தமான ஓர் கட்சிக் கூட்டமாக மாற்றிவிட உறுதிசெய்துவிட்டார்களென்பது தோன்றுகிற்று.

இப்போது காங்கிரஸிலே இரண்டு கட்சிகள் இருக்கின்றன. ஒரு கட்சியார் (அதாவது நிதானஸ்தர்) கவர்ன்மெண்டாரை எதிர்த்துப் பேசிக்கொண்டேயிருந்து கவர்ன்மெண்டாரின் சஹாயத்தின் பேரிலேயே நமது தேசம் ஸ்வராஜ்யமடைந்து விடுமென்று நம்புகிறார்கள். மற்றொரு கட்சியாருக்கு மேற்படி வழி பொருளற்றதென்றும், தப்பானதென்றும் தோன்றுகிறது. கல்கத்தா காங்கிரஸில் இருகட்சியாரும் சேர்ந்து, இருவரும் தத்தம் கோட்பாடுகளைச் சிறிது அடக்கிக்கொண்டேனும் மற்றக் கட்சியுடன் சரிப்படுத்திக் கொண்டு போகவேண்டுமென்ற எண்ணத்துடன் வேலைசெய்தபடியினாலும், மஹா புருஷராகிய ஸ்ரீ தாதாபாய் நவுரோஜியின் முயற்சிகளினாலும், சமாதானம் ஏற்பட்டது. ஜாதீய மஹாசபை ஒரு கட்சிக் கூட்டமாகாமல், எல்லாருக்கும் பொதுவாகவே நிகழ்ந்து நின்றது. இந்த வருஷம் ஸூரத் காங்கிரஸிலேயும் அவ்வாறே இருக்குமென்றெண்ணினேன்.

ஆனால் பம்பாய் நிதானஸ்தர்களோ கவர்ன்மெண்டாரின் விருப்பமே பிரதானமென்று எண்ணி, ஜாதீய அபிவிருத்தியை ஓர்பொருட்டாக்காமல் திரஸ்கரித்துவிட்டார்கள். பஹிஷ்காரம், ஜாதீயக்கல்வி முதலிய தீர்மானங்கள் கல்கத்தாவிலே பொதுவாக எல்லோரும்சேர்ந்து செய்துகொண்டார்கள். அந்தத் தீர்மானங்கள் காங்கிரஸ்சபையினால் அங்கீகாரஞ் செய்துகொள்ளப்பட்டன. ஆகவே, மேற்படி தீர்மானங்களைக் காரியத்துக்குக் கொண்டுவரவேண்டியது நமது தேசத்தாரனைவருக்கும் தவறவொண்ணாத கடமையாயிற்று. ஆனால் கவர்ன்மெண்டாருக்கு நமது பஹிஷ்கார முயற்சியிலும், ஜாதீயக் கல்வி முயற்சியிலும் வெறுப்பு உண்டாயிற்று. அவர்கள் தமதுவெறுப்பைப் பகிரங்கமாகவே தெரிவித்தார்கள். இதைக்கண்டவுடனே, பம்பாய் நிதானஸ்தர்கள், மேற்படி இரண்டுதீர்மானங்களிலேயும், ஸ்வராஜ்யம், சுதேசியம் என்பவற்றைப்பற்றிய தீர்மானங்களிலேயும் சிலமாறுபாடுகள்செய்து, காங்கிரஸின் கொள்கையைப்பின்புறமாகத் தள்ளி

கவர்ன்மெண்டாரைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டார்கள். பம்பாய் நிதானஸ்தர்கள் இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு ஸ்ரூரத் தகுதியான இடமென்று நினைத்தார்கள். நிதானக் கட்சியாரின் மேற்படி நோக்கத்தைப் புதிய கட்சியார் எதிர்க்க முயன்றார்கள். காங்கிரஸ் சபையின் கொள்கை இப்போதிருக்கும் நிலைமையிலிருந்து மேல் நோக்கிச்செல்லாவிட்டாலும், கீழேபோய்விடாமல் பாதுகாக்கவேண்டுமென்பது புதிய கட்சியாரின் கருத்து. "நீங்கள் புதிதாக அபிவிருத்திக்கு முயற்சிகள் செய்யாவிட்டாலும், கல்கத்தா காங்கிரஸில் நிறைவேறிய நன்மைகளைக் கூடக்கெடுத்துவிடாமல் முன்னிருந்த மாதிரியிலேயே வைத்துக்கொண்டிருங்கள்." அது செய்வது போதும்'' என்று புதிய கட்சியைச்சேர்ந்த நாங்கள் அவர்களிடம் (பம்பாய் நிதானஸ்தர்களிடம்) முறையிட்டோம். அவர்கள் கேட்கவில்லை. எங்களை அவமதிப்புடன் நடத்தினார்கள்.

நிதானக் கட்சியாரைத் தமது பக்கத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்த இச்சைக்கு நிதானஸ்தர்களும் உடன்பட்டுவிட்டார்கள். நம்மிலே எல்லாக்கட்சியாரும் ஏக சிந்தையுடன் வேலை செய்து கவர்ன்மெண்டார் தேசமுழுதும் செய்யப்போகிற பயங்கரமான இம்சையை எதிர்க்கவேண்டுமென்பதை நிதானஸ்தர்கள் மறந்துவிட்டார்கள். நிதான காங்கிரஸ் என்று பிரத்தியேகமான காங்கிரஸ் என்று தனியாக ஒன்று ஏற்படுத்தத் துணிந்துவிட்டார்கள். அதாவது நமது காங்கிரஸ் சபையைத் தப்தி நதியிலே அமுக்கிக் கொன்றுவிட்டதுபோலாகும்.

இனி நாம் செய்யவேண்டியது யாது? காங்கிரஸ் சபை மிகவும் உபயோககரமானது. எவ்வளவோ வருஷத்து முயற்சிகளின்பேரில் வளர்ச்சி பெற்ற வஸ்து. இத்தனை பயனுற்ற சபையை உடைத்துவிட்டார்கள். ஒரு குடும்பத்தின் செல்வத்தைப்பங்கிட்டால், அதனால் பங்காளிகள் இருவரும் முன்னைக்காட்டிலும் துர்ப்பலமடைவார்களேயொழிய, பலமிகுதியடையமாட்டார்களென்பது அனைவருக்கும் தெரியும். இதை நிதானக்கட்சியாரும் கூடிய சீக்கிரத்தில் தெரிந்துகொள்வார்கள். இப்போது அவர்கள் காங்கிரஸைப் பிரிவுபடுத்தியதிலிருந்து இரண்டு கட்சியாருக்கும் பலக்குறைவு

உண்டாய்விட்டது. கவர்ன்மெண்டாரின் இஷ்டப்படக் காங்கிரஸ் சபையைச் சிதைப்பதினால், எவ்விதமான லாபமும் கிடையாது. சிற்சில மனிதர்களுக்குச் சுயலாபங்கள் ஒருவேளை கிடைக்கக்கூடும். ஆனால் தேசப் பொதுமைக்கு யாதொரு லாபமும் ஏற்படாது. இதைச் சிறிது காலத்திற்கப்பால் நிதானஸ்தர்கள் தெரிந்துகொண்டு தாமாகவே நம்முடன் ஒற்றுமைகொள்ள விரும்புவார்கள். ஆனால் அவர்களுக்குச் சுயபத்தி திரும்பி மறுபடியும் ஒற்றுமைக்கு உடன்படும்வரை நாம் சும்மா இருக்கலாமா?

நாம் காங்கிரஸ் வேலையைத் தலைமேல் எடுத்துக்கொள்ளவேண்டும். நிதானஸ்தர்களால் கொலையுண்ட காங்கிரஸ் சபையை மறுபடியும் உயிர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும். மாகாணத்துக்கு மாகாணம கமிட்டிகள் ஏற்பாடு செய்து, அங்கங்கே காரியதரிசிகள் வைத்து, அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் காரியங்களைப் பற்றி அடிக்கடி தகவல் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். நாம காங்கிரஸ் சபையைப புதுப்பித்து, அதன், சென்ற வருஷத் தீர்மானங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு மேன்மேலும் படிப்படியாக விருத்தி செய்துகொண்டு வரவேண்டும்.

காங்கிரஸ் சபையைப் பின்னுக்கிழுகக வேண்டுமென்ற நோக்க முடையவர்கள் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து ஒரு "கன்வென்ஷன்" ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்மை அதனின்றும் பிரிக்கும்படியான நிபந்தனைகள் செய்துவிட்டனர். காங்கிரஸ் நிலையைப் பின்னே தள்ளி மிகவும் வற்றிப்போன ஓர் அபிஷ்டத்தை நிறுத்தி, அதை ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போடுவோர் மட்டுமே அந்தக் கன்வென்ஷனில் சேரலாமென்று விதித்திருக்கிறார்கள். போகட்டும். இதனால் நமக்குப்பாதகமில்லை. நாம காங்கிரஸ் சபைக்கும் சுதேசத்திற்கும் நமது கடமையைச்செலுத்தும் பொருட்டாக நமது கமிட்டியை வைத்துக்கொண்டு காங்கிரஸ் காரியங்களை நடத்திவருவோம். அடுத்த வருஷம நமது பிரயத்தனங்களால் காங்கிரஸ் கூட்டுவோம. நாம் செய்யும் முயற்சிகளெல்லாம் அடுத்த கட்சியின் முயற்சிகளுக்கு உதவியாகவும் பலமாகவும் இருக்குமேயல்லாது அவர்களை எதிர்த்து வேலை செய்யமாட்டோம். ஈசனுடைய கருணை

யால் இன்னும் சிறிது காலத்துக்குள் நம்முடன் வந்துசேர்ந்துகொள்வார்களென்பது எனக்கு நிச்சயமே. அப்பால், இருதிறத்தாரும் சேர்ந்து ஸ்வராஜ்ய ஸ்தாபனத்திற்குப் பாடுபடுவோமாகவும்.''

நிற்க, இம்மீட்டிங்குக்குப் போலீசு பந்தோபஸ்தேதுமில்லை. என் வேண்டும்? கரைகாப்புள்ளது நீர்கட்டுகுளமன்றிக் கரைகாப்புள்ளதோ கடல்?

இனி நாம்சொல்லவேண்டியதொன்றே. அஃதென்னவெனில் போனதுபோகட்டும் என்று விடுத்து இருகட்சியாரும் தாய்நாட்டுவிரோதிகளுடைய துர்ப்போதனைக்கு இடங்கொடாமல் "வயிறும் அவயவங்களும்" என்ற கதையின் படிப்பினையை அறிந்து ஒத்துவாழ்ந்து தேசநன்மையைப் பலப்படுத்தவேண்டியதே. நிற்க, சூரத்துக்காங்கிரஸில் நடந்த சம்பவங்களை வைத்துக்கொண்டு புதுக்கட்சியார்களை வைவதே பெரும்வேலையாய் மிதவாதிகள் திரிகின்றனர். இவர்களது பேச்சைக்கேட்டு அநேகர்மயங்கித்தாமும் புதுக்கட்சியாரைத் திட்டுவாராயினர். அன்னோர் இனியேனும் தமதுபிழையை உணர்ந்து வாயடங்கித்தமது அறியாமைக்குவிசனிப்பார்களென்றே எண்ணுகிறோம். அனைவரும் கவனிக்கவேண்டிய அதிமுக்கிய விஷயம் ஒன்றுளது. அஃதியாதெனில், "வந்தேமாதரம்" சொல்லுகிறபடி.

"தேசத்தின் நிலைமையானது திடீரென்று பழைய துறையைவிட்டுப் புதிய துறையில் இறங்கும்பொழுது இப்படிப்பட்ட சங்கடங்கள் நேரிடவே செய்யும். ஐரோப்பிய நாடுகளில் நமது காங்கிரஸினும் பெரிய சபைகளிலேயே அபிப்பிராய பேதங்களுண்டாகும்பொழுது இப்படிப்பட்ட குழப்பங்கள் மட்டுமல்ல, பலமான அடிபிடிகலகம் காயங்களோ உண்டாகின்றன. இதுவரையும் மிதவாதிகள் இந்தியாவின் க்ஷேமத்திற்கென்று உழைத்து வந்த மார்க்கத்தைப் பொதுஜனங்கள் நம்பவில்லை. இப்பொழுது பொதுஜன அபிப்பிராயமே மிதவாத முறைகளுக்கு எதிராய் நிற்பதால் இப்படிப்பட்ட குழப்பங்கள் வராமலிருக்கமுடியாது. ஆதலால், சும்மா அவன் கெடுத்தான் இவன் கெடுத்தான் என்று கூச்சலிடுவதைவிட இனிமேல் நடக்கவேண்டிய தென்னவென்பதைப் பற்றி ஆலோசனை செய்பவர்களே தேசாபிமானிகள் ஆவர். பொதுஜனங்கள் இப்பொழுதிருக்கும் உண்மை நிலைமையை உற்றுணர்ந்து, அவர்களுடைய அநுதாபத்தையும் ஆதரவையும் அநுசரித்துக்கொண்டுசெல்பவர்கள் தாம் ஜனத்தலைவர்களேயன்றிப் பொதுஜன அபிப்பிராயத்தைக் காலின் கீழ்த் தள்ளிவிட்டுத் தங்கள் மனோபீஷ்டப்படி காரியங்களைச்செய்ய விரும்புகின்றவர்கள் ஜனத்தலைமை பெறமாட்டார்கள்" என்பதே.

**M. கோபாலகிருஷ்ணையர்.**

அக்கிராசனாதிபதி மாணவர் செந்தமிழ்ச்சங்கம் மதுரை.

# தலைமகுடன் சரித்திரத்தின் ஒருபகுதி.

அவர்கள் யாத்திரை போய்க்கொண்டிருக்கும்பொழுது, இராஜ
தந்திர விஷயமாகவும், அதிலும், நல்லோர்களைத் தெரிந்து பழகிடு
மாறும் தீயோர்களது வஞ்சகத்துக்குள்ளாகாது அவர்களை விலக்குமா
றும் மானிட இயல்பைப் பகுத்தறியும் விஷயமாகவுமுள்ள அனேக
கடினமான பாகங்களைக்குறித்துத் தனக்குத் தெளிவிக்குமாறு மந்தி
ரத்தைத் தலைமகுடன் வேண்டிக்கொள்ளுகின்றான். இப்படி யவர்
கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, காற்று ஓய்ந்துநிற்க அவர்கள்
அடுத்திருந்த தீவொன்றி லிறங்கித் தங்கும்படி நேருகின்றது.
அவர்களுக்குச் சற்றுநேரத்திற்குமுன் அதே தீவில் உல்லாசனுமிற
ங்கியிருந்தான். அவனின்னானென அறியாமலே தலைமகுடன் அவ
னைக் காண்கின்றான். அவனுடன் பேசுகின்றான். ஆனால், அவன்
கப்பலேறிப்போன பிறகு இன்ன காரணமெனத்தெரியாது தலைமகு
டனது மனஞ் சஞ்சலப்படுகின்றது. மந்திரர் அதன் காரண மின்ன
தென விடுத்துச்சொல்லிச் சீக்கிரத்தில் தன் தந்தையைத் திரும்ப
வும் காண்பானென அவனுக்கு உறுதிசொல்லி யவனை யாற்றுகின்
றார். மீன்விழியாளுக்குப் பலி பூசனை செய்யவேண்டுமெனச் சொ
ல்லி யவனை யிருத்தி யவனது பொறுமையையும் பத்தியையு மின்
னும் சோதிக்கின்றார். மந்திரரென்னு முருவேற்று மறைந்து நின்ற
அந்தத்தேவி தனது இயற்கையுருவேற்றுநிற்கத் தலைமகுடன் அவ
ளின்னாளென அறிந்து போற்றுகின்றான். அப்பொழுது அந்தத்
தேவி யவனுக்குக் கடைசிமுறையாய் ஞானோபதேசஞ்செய்துமறை
கின்றாள். தலைமகுடன் இருக்கைக்குச்சென்று அங்கு தனது அகலா
அன்புடைய பூழியனென பூமன்னது வீட்டில் தன் தகப்பனைக் காண்
கின்றான்.

குளிர்ந்தகாற்றுமோதப் பாய்கள் விம்மிஉயர்ந் தெழுந்தன. விரவ
ரத் தரை பின்னிடுவதுபோற்றோன்றியது. கடுஞ்சீதச்சுழல்காற்று
வெள்ளியபனிக்கட்டியை நான்குபுறமுந்தூவ அதனால் மறைந்த முக
டுள்ள உலூக்தா மலையின் முனையையும், இந்திரனது வச்சிராயுதத

நால் பலமுறை தாக்கித் தகர்க்கப்பெற்றும், இன்னு மிறுமாப்புடன் வானமுட்டத் தலைதூக்கி நிமிர்ந்து நிற்கும் அகர சிகர மலையையும், கப்பலோட்டிகள் நெடுந்தூரத்திற் கண்டார்கள்.

" நீரெனக்குப் போதித்துள்ள இராஜ தருமங்களை நான் நன்று அறிந்துகொண்டேனென எனக்குத் தோன்றுகிறது. ஆதியில் அவைகளெனக்குக் கனவிற்கண்ட தோற்றங்கள் போலிருந்தன. ஆனால், வரவர அவைகள் தெளிந்து அங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றன. இதுபோலவே பொழுதுவிடியு நேரத்தில் எல்லாப்பொருள்களும் தெளிவற்று மேகஞ்சூழ்ந்தனபோற்றோன்றும். பிரளயத்துக்குப்பின் நவசிருஷ்டியுண்டாவதுபோல் அவைகள் சிறுகச்சிறுகத் தலையெடுக்கின்றன. வரவரமிகுந்து, உலகைச் சூழ்ந்துள்ள இருளையகற்றி, எதுவுந் தன்னுருக்கொண்டு விளங்கித் தன்னிறங்கொள்ளும்படிசெய்யும்சோதிபோலவும் அவைகள்வரவரத் தெளிகின்றன. பல்லோரிடத்துள்ள பல்வியல்களைப் பகுத்தறிவதும், பலதொழில்களுக்காக அவர்களைத் தெளிந்தெடுப்பதும், அவ்வவர்களது திறமை வல்லமைக்குத்தக்கபடி வினையிடுவதும் இராஜ தந்திரங்களென நீரெனக்குப் புகட்டினீர். ஆனால், பல்வியல்களையும் பகுத்தறியும் வகை யெப்படியென நானின்னும் அறிந்திலேன்" என்று, யாத்திரை செல்லும்பொழுதே தலைமகுடன் மந்திரரை நோக்கிக்கேட்டான்.

"மக்களியல்பு அறியவேண்டின் அவர்களை யூன்றிக் கற்கவேண்டும். அவர்களை யூன்றிக் கற்கவேண்டின், அவர்களை யடிக்கடி கண்டு பேசவேண்டும். அரசர்கள் தமது குடிகளுடன் கலந்து வார்த்தையாட வேண்டும். அவர்களது அபிப்பிராயங்களைக் கலந்து கேட்க வேண்டும். அவர்களுக்குச் சிறுதொழில்களிட்டு, அதற்கு மேலான தொழில்களேற்க வல்லவர்களா வென்றறியுமாறு, அவர்களிட்ட தொழில் செய்யும் விதத்தைக் கவனிக்கவேண்டும். என்னருமைத் தலைமகுட! நீ அசுவ வித்தை கற்றவாறெப்படி? அவைகளைப்பன்முறை பரீட்சித்துப்பார்த்ததாலும் அவைகளது உயர்வு தாழ்வுகளறிந்து அனுபோகமுடையவர்களுடன் கலந்து பேசியதாலுமல்லவா? அதுபோலவே, மனிதர்களது உயர்வு தாழ்வுகளை யுய்த்தறிவதைத்

த்மது கல்வியாகக்கொண்டு அறிவிலும் வயதிலும் முதிர்ந்த நல்லோர் களைக்கண்டு பேசுவாயாக. இவ்விதமாக, மானிட இயல்பறியு நுண்ணறிவு, நீயறியாமலே சிறுகச்சிறுக உனக்குண்டாகும். உன்கண்ணிற் படும் ஒவ்வொருவராலும் எதெது எவ்வெவ்வளவு ஆகுமெனக்கண்டு கொள்வாய். நற்கவிகளை யடிக்கடி படிப்பதாலும் கவிரசமறிந்தோரிடத்துக் கலந்து பேசுவதாலுமல்லவோ, ஓர் நற்கவிக்கும் வெறும் பாட்டுக்கட்டுவோனுக்குமுள்ள பேதத்தை யறியக்கற்றாய்? சங்கீதத்திலுனக்கு ஞானமுண்டானதெப்படி? அது விஷயத்திலும் அதே விதமாகப்பழகியதாலன்றோ? இப்படியிருக்க, மனிதர்களை நன்கறியாது அவர்களை நன்றுள்வதெப்படி? மனிதர்களுடன் கூடி வாழ்வதாலன்றி, யவர்களைக்குறித்தறிவதெப்படி? பகிரங்க இடங்களில் ஜனங்கள் இலக்கின்றிப் பலபட்டடையாய்ப் பேசும்பொழுதும் மனத்தில் முன் சங்கற்பமின்றி அப்போதப்போதும் மனத்திற்றோன்றும் விஷயங்களை யபபொழுதப்பொழுது மனத்திற்குத்தோன்றியபடி பேசும்பொழுதும் அவர்களைக்காணுதல் அவர்களுடன் கூடிவாழ்தலாகாது, அவர்களைத்தனியிடங்களிற் காணவேண்டும். அவர்களது நெஞ்சினுளாழ்ந்து புதைந்து கிடக்கும் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் புகுந்தறியவேண்டும். அவர்களைப் பன்முகத்தாலும் நோக்கவேண்டும். அவர்களது நீச்சுகிலேகளைச் சோதிக்கவேண்டும். அவர்கள் செய்யும் கர்மங்களின் உட்கருத்தறியவேண்டும். மானிட இயல்பைச் சரியானவாறு அறிய அவர்களிருக்கவேண்டிய முறையின்னதென முதலிலறியவேண்டுவதவசியமாகும். தக்காரின்னார், தகவிலரின்னர் எனப்பகுத்தறியுமாறு, தகைமை யென்றாலென்னவென்ற தெளிவுக் திட்டமுமான அறிவு அவசியமாக வேண்டும். அறத்தைக்குறித்தும், தகைமையைக்குறித்தும் ஜனங்கள் ஓயாது பேசுகின்றார்கள். ஆனால், அவை யென்னவென்று திட்டமாயறிந்தவர்கள் சிலர் கூட இல்லை. சொற்களாக நோக்கின், அவைகள் உயர்ந்த சொற்களென்பதிலையமில்லை. ஆனால் அப்பதங்களை வாயாற் சொல்லி யுருவேற்றி யிறுமாப்போர் பலர். விஷயத்தில் அவைகள் பொருளற்று வெற்றுச்சொற்களாகின்றன. நீதிவான் யார், விவேகி யார், அறவோன் யார் எனத்தீர்மானஞ் செய்வதன்முன், நீதி, விவேகம், அறம் இவைகளினது இலட்சணங்கள் என்னவென்ன நன்கறியப்படவேண்டும்.

விவேகமும் செங்கோன்மையு நிறைந்த அரச தருமங்களை நிலைநாட்டுவோரின்னாரென்றும் அவைகளை விட்டுப் போலிச் சீர்திருத்தமும் அரசாங்கக் கிருத்திரமமும் செய்வோரின்னாரென்றும் பகுத்தறியுமுன், விவேகமும் செங்கோன்மையு நிறைந்த இராஜதருமங்களளவையென அறியவேண்டும். பற்பலபொருள்களின் அளவுகளைக் கண்டறிவதற்கு அடியாதாரப் பொதுஅளவொன்றுவேண்டும். குணங்களையும் நடக்கைகளையுங் கண்டறியச் சிறுகா பெருகா முறை பிறழ்ந்துவாராச் சில ஆதாரங்கள் வேண்டும். அவ்வாதாரங்களையொட்டி நாம் அவைகளை நிதானிக்கவேண்டும். மானிடப்பிறவிப பெரும்பயனென்னவெனவும் மனிதர்களை யென்னநோக்கத்துடனாளவேண்டுமெனவும் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். குடிகளை நல்லொழுக்கினர்களாகவும், சுகிகளாகவுஞ் செய்வதே யாட்சியின் முழுக்கருத்துங் கொள்கையுமாம். இந்தக் கொள்கைக்கும், ஓர் மன்னன் தனக்கென்று மட்டும், ஆட்சியும் அதிகாரமுங் கைக்கொண்டிருக்கின்றானென்றகொள்கைக்கும் சிறிதும் ஒவ்வாது. இத்தகைய கொள்கை யகங்காரங்கொண்ட ஓர் கொடுங்கோன் மன்னனுக்குமட்டுந்திருப்தியுண்டாக்கும். ஓர்செங்கோன்மன்னனது வாழ்வு குடிகளின் பொருட்டே. அவன் தனது ஆத்மசுகத்தையும் இன்பத்தையும் அவர்களது நன்மையின் பொருட்டிழக்கின்றான். குடிகளது க்ஷேமமாகிய இவ்வரும்பெருங்கருத்தைத்தன் கண்முன்னேயாது வையாது விட்டகலும் மன்னனால், ஏதாவதொன்றிலிக்கருத்து வாய்க்கப் பெறுமாயின், அது தற்செயலாய்மட்டும் வாய்த்ததாகும். மீகாமனின்றி, நட்சத்திரக் குறிப்பின்றி, கரைத்தோற்றமின்றி, நடுக்கடலிடைப்பட்ட ஓர் மரக்கலம்போல் அவனும் காலநீரோட்டத்தில் பட்டு மிதப்பான். இந்தநிலையில் அந்தக்கப்பல் மோதுண்ணாது தப்ப முடியுமோ?

"அரசர்களுக்குத் தருமத்தின் இலட்சணமின்னதென்று தெரியாததால், மனிதர்களிடம் தேடிக்கண்டுகொள்ளவேண்டுவ தின்னதெனவும் பலசமயங்களில் அவர்களுக்குத் தெரியாது போகின்றது. நல்லொழுக்கினரைக்கண்டு தாட்சிணியமில்லோரென எண்ணுகின்றார்கள். அவர்கள் மரியாதை யில்லாதவர்கள் போலும் பிறரை

மதியாதவர்கள்போலவுந் தோன்றுவதால், அம்மன்னர்களுக்கு அவர்களைக்கண்டவுன் அச்சமும் அருவருப்புமுண்டாக, அவர்களைப் பராமுகஞ் செய்து, முகத்துதிசெய்வோர்களை ஆசையுடன் நாடிச் செல்லுகின்றார்கள். அந்த நிமிஷமுதல் மனநேர்மையும் ஒழுக்கமும் போனவிடந்தெரியாது போகின்றன. மன்னர்கள் பொய்ப்புகழ்ப் பேயிழுக்க வழிவிலகிச்சென்று உண்மையுடையோரையறிந்துபற்றத் தகுதியற்றவர்களாகின்றார்கள். நல்லொழுக்கென்பதே பூமியிற் கிடையாதென முடிவுகொண்டு விடுகின்றார்கள். தீயோர்களை நல்லோர்களறிய முடியுமன்றி நல்லோர்களைத் தீயோர்கள் அறிதல் முடியாது. எது தம்மால் அறியமுடியாதோ அது இல்லையென்றே எண்ணிவிடுகின்றார்கள். எதிலும் ஐயங்கொள்ளமட்டுந்தெரியும். அதற்கு மேலொன்றுந் தெரியாததால், எதையுமொன்றுபோலவே சங்கிக்கின்றார்கள். பலர்கண்ணிற்படாது மாளிகையினுட்போய் மறைந்து கொள்ளுகின்றார்கள். மகா அற்பவிஷயங்களைக் கூடச் சூதென்றும் மோசமென்றும் வகைபாக்குகின்றார்கள் அவர்களைக் கண்டு ஜனங்கள் நடுங்க ஜனங்களைக்கண்டு அவர்கள்நடுங்குகின்றார்கள். அவர்களிருளை விரும்புகின்றார்கள் அவர்கள் தம்பிறவிக் குணத்தை யென்ன மன்றத்தும் அது வெட்டவெளிச்சமாய்த்தெரிந்து விடுகின்றது.

குடிகள் கெட்ட எண்ணக் குறுகுறுப்புக்கொண்டு, திரை வழியே யுற்றுநோக்கி யெல்லா மறைகளையும் புகுந்து சோதிக்கின்றார்கள். இவ்விதமாய்ப் பலர் கண்ணிற்படும் அவன் கண்ணிலெவரும் படார். அவனைச் சூழ்ந்து நிற்குந் தன்னயங் கருதுங் கயவர்கள் அவன் காட்சிக்கரியனு யிருத்தல்கண்டு மனமுவக்கின்றார்கள், எந்த மன்னன் காட்சிக்கரியனோ அவனுக்கு சத்தியம் காட்சிக் கரிதாய் விடும். அவனது குருட்டுத்தனத்தால் தன்கருமங்கொள்ளக் கருதுபவர்கள் அவன்கண்களைத் திறக்க விரும்புவோரை யெல்லாம் தூற்றவோ, அல்லது நாடுவிட்டுத் துரத்தவோ வழிதேடித் திரிவார்கள். இனஞ்சேரா ஓர்விதக்குறும்பப் பெருமை கொண்டு வஞ்சவலையிற் பட்டுழல்கின்றான். தானுழல்வதுகண்டு நடுங்குகின்றான். ஆனால் அவன்பட்டுழல வேண்டுவதும் தகுதேயாம். 'சிலர்களை மட்டுங்கண்டு பேசுவோனுக்கு, அவர்களது மனோபாவங்களும்' துரபிமானங்களும் அநேகமாய்ப்படிந்துவிடுகின்றன. சான்றோரிடத்தும் கோபதாபங்க

ளும் தூரபிமானங்களுமின்மை யரிது. பிறர்மூலமாகவும் விஷயங்களை
அறிய நேருமாதலால், கோட்சொல்லிகள் வலையிற் படவுமிடமுண்டு.
கோட்சொல்லிகள், பிறரைக்கொல்லும் நஞ்சுண்டுவளரும் அருவருக்
கத்தக்க இழிய ஓர் வகுப்பினராவார். அவர்கள் அணுவை மலை
பண்ணுவார்கள். குற்றமற்றதைக் குற்றஞ் சுமத்துவார்கள். உள்ள
பழி சுமத்துவதோடன்றிப் பழியும் உண்டுபண்ணுவார்கள். தங்
கருமமாகவேண்டி வல்லமையற்று அழுக்காறுற்ற ஓர் மன்னனுக்கு
அடியற்ற சங்கையும் தகாக் குறுகுறுப்பு முண்டாக்குவார்கள்.

அதனால், என்னருமைத் தலைமகுட! முதன்மையாக நீயறிந்து
கொள்ள வேண்டுவது மனிதனையேயாம். அவனை நன்று ஆராய் ஒரு
வன் மற்றொருவனைக் கொண்டுள்ள அபிப்பிராயத்தைக் கேள்.
அவர்களைச் சிறுகச் சிறுகப் பரிசோதி. எவரையும் முற்றும் நம்பி
விடாதே. கொள்ளும் அபிப்பிராயத்தில் சிலவேளைமோசமும் போ
வாயாதலின் அந்த அனுபவங்கொண்டும நீயறிவுடையோனாகுக. தீய
ர்கள் மிகத் தந்திரமாய் மறைந்துறைதலால், அவர்களை யெப்பொழுதும்
கண்டுபிடித்தல் முடியாது. அதனால் பிறரைக்குறித்து அபிப்பிரா
யங்கொள்வதில் சாவதானம் வேண்டும. அவர்கள் நல்லோரென்றே
னும் தீயோரென்றேனும் பதறி முடிவுகொள்ளாதே. கொள்வை
யேல், தவறு எவ்விதமானாலும் ஆபத்துக்கிடமாகும். இவ்விதமாகத்
தவறாதும் உனக்கறிவுண்டாகும். அறமும் ஆற்றலுமுள்ள ஒருவன்
கிடைத்தால், அவனுக்கு வினையிடல் மட்டும் போதாது. அவனை
நம்பவும் வேண்டும். ஏனெனில், அவ்வித மனிதர்கள் தமது தகுதி
யுடைமை பிறர் தெரிந்துணர வேண்டுமென்ற ஆசையுடையவர்கள்.
பொருட்பரிசிலும் பிறர்நம்பப் பிறர்மதிக்க நடப்பதே மேலானதென்
னுங் கொள்கையுள்ளவர்கள். அற்பவிஷயங்களில் எப்பொழுதும்
ஆசைகொள்ளா மனவுறுதியுடையோர் பலர் வரையற்ற அதிகார
மும் மட்டற்ற செல்வமும் அவர்களாசையைக் கவர்ந்திழுக்கும்
பொழுது எதிர்த்து நிற்கமாட்டாது சாய்ந்துமுறிந்தாராதலின், அவர்
களுக்கு வரம்பிலா அதிகாரங் கொடுத்து அவரது நல்லொழுக்
கத்திற்குக் கேடுவரச் செய்யாதே. அரசநட்பிற்குத் தகுதியான
அறிவும் அறமும் வாய்ந்த இருவர் மூவர்கள் கிடைக்கும்படியான

தேவாருள் ஓர் மன்னனுக்கிருமாயின் அதேகுணத்தினராய் அர சாங்கத்தில் தாழ்ந்த வேலைகள் மேற்கொள்ளத் தகுதியுடைய ஏனையர்களை யவர்கள் மூலம் கண்டுகொள்வான். இப்படியாகத் தான் தேர்ந்த சிலர் மூலமாய்த் தன் கண்களாலென்று மெட்டமுடியாத மற்றவர்களைத் தெரிந்துகொள்ள நேரும்" எனத்தலைமகுடனுக்கு மந்திரர் சொன்னார்.

"சீலமில்லாவிடினும் வல்லமையுள்ளோர்களை நியமிக்கவேண்டு மென நான் பலவாறு கேட்டிருக்கின்றேனே" என்றான் தலைமகுடன். அவ்வித மனிதர்களை நியமிக்கவேண்டுவதும் சிலவேளை 'யவசியமாக நேரும். ஓர் நாட்டார் கலகம் விளைத்து ஒழுங்கற்றிருக்கும்பொழுது கெட்டவர்களும் சூழ்ச்சியுள்ளவர்களும் அதிகாரங் கைக்கொண்டிரு க்க நேரும். அவர்கள் அரசாங்கத்தில் உடனே நீக்கமுடியாத குறிப் பான வேலையிலிருப்பார்கள். திடீரென எதிர்க்கமுடியாத அதிகார மும் செல்வாக்கும் பெற்றவர்களும் அவர்களிடம் நம்பிக்கை வைத் திருப்பார்கள். அவர்களையே நேரே யெதிர்த்தால் எல்லாவற்றையும் தீராவண்ணம் கலக்கிக் குழப்பி விடுவார்களாதலின், அவர்களையும் எதிர்க்கக்கூடாது. அவர்களைச் சிறிதுகாலம் வேலையில் வைத்திருக் கவேண்டும். ஆனால் அவர்களது பெருக்கத்தைச் சிறுகச் சிறுக க் குறைப்பதில் மாறு நோக்கம்வேண்டும். அவர்கள் வேலையிலிருக் கும்பொழுதும் அவர்களை நம்பிவிட வொண்ணாது. எவன் தன்னுண் மறையை யவர்களிடம் வெளியிடுகின்றானோ அவன், அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தவனாகின்றான். அவ்வதிகாரத்தை யவர்கள் முறை தப்பிச் செலுத்துவது திண்ணம். வெளியிடுபவன் வெளியிட்ட நிமி ஷமுதல் அவ்வதிகாரத்திற்குத்தானே யடிமையாவான்.

சங்கிலியாற் பிணிபட்டதுபோல்,தனது மறையாற் பிணிபட்டு அவர்களிஷ்டப்படி யுழுபவான். தனது பங்கத்தை நினைத்து எவ்வ ளவு துக்கப்படினும் அதைவிட்டு விலகவுமுடியாது. இரகசியமிலா வெளிவிஷயங்களை யவர்கள் நடத்தட்டும். அவர்கள் அன்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படட்டும். தமது நோக்கப்படி விட் டால் மட்டும் அவர்கள் பற்றி நிற்பார்களாதலின், அவர் நோக்கப்படி யவர்களுக்கு வினையிடல் வேண்டும். ஆனால் முக்கியமான இரகசிய

மான யோசனைகளில் அவர்களைக் கலக்கவொண்ணாது. அவர்களைச் சுழற்றிக்கொண்டிருக்கவேண்டுவது தகுதியென எண்ணப்பட்டால் சுழற்றிவிடப் பொறியொன்று எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். ஆனால், அரசன் தனதுள்ளத் திறவுகோலையேனும்,* நாட்டுத்திறவுகோலையேனும் அவர்களை நம்பிக்கொடுக்கக்கூடாது. பெருங்குழப்பமடங்கி தெளிந்த அறிவும் மனநேர்மையும் நிறைந்தோரால் அரசாட்சி யொழுங்காய் நடந்துவரும்பொழுது எவரது தொண்டு மன்னனுக்குச் சிறிதுகாலம் தவிர்க்கமுடியாது வேண்டியிருந்ததோ அந்தத் தீயர்கள் நாளடைவில் வேண்டாதவர்களாகி யிருக்குமிடந் தெரியாது மறைந்துபோவார்கள். தீயோரிடத்தாயினும் செய்நன்றி மறப்பின், அத்தீயர்போலவேயாகும். அவ்விதக் குணமுடையோரிடம் அன்புபாராட்டும் பொழுதுகூட அவரது குணத்தை மாற்றும் நோக்கமிருக்கவேண்டும் தவறு மானிட இயலாதலின். அவர்களது பிழைகளிலும் சிலவற்றைக் கவனியாது விடல்வேண்டும். ஆனால் அரசனது அதிகாரம் மெல்ல மெல்ல மேலோங்கி யவர்களது தீச்செயல்களையடக்காது விட்டால் தங்குதடையின்றிச் செய்வார்களாதலால், அவைகளை வேர்களைய வேண்டும். நன்மை புரியவேண்டித் தீயர்களைக் கருவியாகக் கொள்ளவேண்டி நேருவது எப்படியாகிலும் முடிவில் கஷ்டகாலமென்றே நாமொப்புக்கொள்ள வேண்டும். சிலவேளைகளில் அதைத்தள்ள முடியாது கொள்ளவேண்டிவரினும், கூடிய சீக்கிரத்தில் அதை விலக்கவேண்டும். ஒழுங்குபடுத்தவும் நீதிசெலுத்தவுமன்றி நிவேருசைமட்டும் ஓர் மன்னனுக்கில்லாதிருப்பின் அவனது கருத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வல்லமையும் தூய்மையும் வாய்ந்தவர்கள் அவனுக்குக்கிடைப்பார்கள். மோசகாரர்களும் வஞ்சகர்களும் தாங்கள் செய்யும் தொண்டு எவ்வளவு திறமானவையாயினும், அவர்கள் குணத்தால் இழுக்குண்டாமாதலின் அம்மன்னன் அவர்களை விட்டொழிப்பான்.

(இன்னும் வரும்)

ம. சுப்பிரமணிய அய்யர்.

(336-ம் பக்கத்தொடர்ச்சி.)

திண்ண மென்று நினைந்த பொய்யுடற்
றேய்ந்த வெம்பிணி வாய்ந்தபின்
கண்ணு லைவதென் மனங்க லங்கிடக்
கால னென்னை யழைக்குநாள்
நண்ணி டாதெனை மைந்தர் சுற்ற
மகற்றி நாடுவர் தஞ்செயல்
எண்ணி டாதுனை யான்ம றக்கினு
நாவுன் னாம மிசைக்குமே. (4)

நஞ்சு போன்ற பிரபஞ்ச வாழ்க்கையை
நாடு புல்லறி வோடுறும்
மிஞ்சு பாடொடு துஞ்சு மென்னை
விலக்கு மாவுன் றிருவுளம்
விஞ்சை மாத ரிறைஞ்ச மாமது
ரைக்கண் வீற்றிடு சேற்கணாய்
வஞ்ச மாயுனை யான்ம றக்கினும
நாவுன் னாமம் வழுத்துமே. (5)

குற்ற மென்னியல் பின்றி யேதுங்
குணமி லாத பிறப்புளேன்
கற்ற சிந்தைய ரோதினுநெறி
கண்டி டாமதிப புன்மையேன்
வற்றி டாக்கட லேழை யன்னை
மருங்க ழைத்த மனோன்மணி
யுற்ற வுன்றனை யான்ம றக்கினு
நாவுன் னாம முரைக்குமே. (6)

வேத மீதொளிர் சோதி யாகி
விளங்கு முன்னியல் பீதெனப்
பேதை யாளொரு போத ணர்ந்து
பிழைக்கு நீதி வழுத்துவை
வாத வூரடி யார்த மிழ்ச்சுவை
வாச மோர்ந்து மகிழ்ந்திடும்
கோதை யேயுனை யான்ம றக்கினு
நாவுன் னாமங்கள் கூறுமே. (7)

உன்னை யன்றி யெனக்கு நல்லுற
வொன்றி லாத துணர்ந்தியான்
துன்னு முன்கழ லென்ம னத்திடை
சூட்டி னேனருள் காட்டுவை
மின்னு மெண்டிசை யும்பர் சாய்ந்திட
வெற்றி பூண்ட கரத்தினோய்
உன்னி டாதனை யான்ம றக்கினு
நாவுன் னாம முரைக்குமே. (8)

ஆதி யந்த மகன்ற சோதிமெய்
யன்பு ளாருண ரின்பமே
கோதொ ழிந்த மனத்த ரோடு
குலாவு நல்லிளங் கோதையே
பீத மாமுறி நடித்த சம்பு
மருங்கொ ளிர்ந்த பசுங்கொடி
பேத மோடுனை யான்ம றக்கினு
நாவுன் னாமம் பிதற்றுமே. (9)

வீடு வேண்டிலன் மாதர் சுற்றமும்
வேண்டி லேனுடற் பாண்டமாம்
பாடு வேண்டிலன் சிந்தை யுன்னடி
பற்று நீதி யியற்றுவை
கூட லார்தவ மொன்றி யோருருக்
கொண்டெ ழுந்திடு மீன்விழி
வாடி யேயுனை யான்ம றக்கினு
நாவுன் னாமம் வழுத்துமே. (10)

### அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

காற்றினுட் புகுந்த பஞ்சின் கதியெனச் சலித்து நெஞ்சிற்
றேற்றமொன் றுணர்வ தின்றிச் சிதைத்திடு மடமை பொல்லாக்
கூற்றினுங் கொடிதா மென்னைக் குலையவே புரியு மன்போ
டேற்றெனக் கருள்வாய் சேலொத்த திலகுகண் ணெழிலி னாளே. (1)

நினைப்பதொன் றுவ தொன்றாய் நெறியக லுலகின் வாழ்வைத்
தினப்படி கருதி நோகுந் தீயனுக் கிலையோ பாதை
வனப்பெலாந் திரண்டு வாய்ந்த மரகதக் கொடியே நாயேன்
உனைப்பக லிரவா யேத்தி யுறைவதெந் நாள்சேற் கண்ணாய். (2)

மடமையாற் றோன்றி நீங்கும் வாழ்வதை நிலையென் றுன்னி
விடமெனும் பொருளை நாடி மெலிவுறு மெனையேன் பாராய்
கடலுளார் மதிபோ லனந்து கரைந்தவா னிடையோ டேபோங்
யுடைமனத் திருளெ லாம்வாய்ந் தொளிர்குழற் றிகழ்சேற் கண்ணாய்.

ஊன்மிசை யெழுந்த கோதை யுணவுகொண் டமர்ந்த சேற்றை
ஈனமா மறுவர் வாழு மில்லினைப் புழுமண் புன்னாய்
கானரி பருந்து செந்தீ கழுகெமக் கெனுமிந் நோயை
நானெனச் சுமந்த லென்னு ணவில்கயற் பொலியுங் கண்ணாய். (4)

பெற்றவர் மனைத பேதை பேசிடு மன்பர் சுற்றம்
உற்றிடும் புதல்வ ரோயா தோடியான் கவருஞ் செல்வம்
கற்றன மறலி தோன்றிக் கடுகுநா ளொன்றாங் கூடல்
நற்றவப் பயனாய் வந்த நங்கையே கயலாங் கண்ணாய். (5)

மறையினுட் கலந்த மெய்யே மருளிலார் மதியிற் றோய்ந்து
நிறையுநல் லுணர்வே ஞால நினைவெலாந் துறந்து நீங்காப்
பொறையுளா ரருந்தி யுள்ளிற் புகட்டிடு மமுதே யென்றன்
குறையகற் றிடுமோ ராறு குறிப்பைசேல் விரித்த கண்ணாய். (6)

எப்பிணி செறிந்து மூண்ட ன்றெனை வருத் திடுமோ சுற்றம்
கைப்பமர் மிருந்து ளூட்டக் கழலுமென் னறிவு வேளை
தப்பிலா மறலி காய்ந்து தமியனைக் கொளவே நாடு
மப்பொழு திசைக்கென் முன்ன ராவையோ கயற்கண் கோவே. (7)

வாடுமெய் யிளமை புன்னேய் வாலிபம் மறைத காமக்
கேடுபெண் காதல் மைந்தர் கிளையெழுந் துயரங் கைத்து
வீடெனு மயக்கம் வாய்ந்தும மிடிமைபின் முதுமை சாவென்
பாடொழிந் தெளியேன் மீளப் பகர்வைசேல் நிகர்கண் ணுளே. (8)

தன்னருட் பொலிவே நின்றாள் தனைத்துணை கொளுமிந் நாயேன்
புண்ணுறற் குளதோ நீதி புன்வினை யனைத்தும் நின்றன்
கண்ணுறிற் படுமென் றேதிக கபடமா புரியும் வேதம்
விண்மரக் கனியே மீன விழியினுய் மொழியொன் றோதாய். (9)

பட்டிடு மெளியேன் பாடு பகரவிங் கெளிதா னோவால்
அட்டுபால் நிகரென் னுள்ளத் தமருமீ யறியா தெனன
விட்டிடு மெளியாள் னெஞ்சப் பிணியகற் றிறைவ னோர்பால்
விட்டிடா தமரு மன்பே மீன்விழி திகழு மின்னே. (10)

---

அருளிலாள் போலென் சிந்தை அனலுற விசைப்பை தீங்கு
வருமெனப் பயந்து நோங்கால் மகிழ்வுற வமைப்பை யெண்ணுப்
பொருளெலாம் நயப்பை வேண்டும் பொருள்கரந் திடுவை புந்தி
மருளிலா ரன்றி யாருன் வழக்கறிந் திடவல் லாரே. (11)

தொல்வினை வசிய தென்றே சொல்வரோர் மாற்ற மென்கில்
அல்லொடு பகலுன் னுமை மறற்றியே யமரு முள்ளம்
புல்லுமார் வினைய னைத்தும் பொறியுமென் றுரைக்கு மேலோர்
சொல்லுமா பொய்யாம் வேதச் சுடரெனத் துலங்கு மன்பே. (12)

இக்கணம் மகிழ்வு பின்னு மிமைப்பொழு தரிய துன்பந்
கைக்குளோன் றாகு மென்றே கருதியோர் பொழுது வத்தல்
பக்குவ மகன்று புந்தி பதறுமோர் கால மென்கில்
எக்கணஞ் சுகமாய் வாழ்வுற் றிருப்பனே இயம்பி டாயே. (13)

சுத்தநிர்க் குணமென் றுன்னைத் தூற்றுவார் சிலர தற்குச்
சத்தியென் றுனையே றாகச் சாற்றுவ ரிரண்டு மொன்றும்
தத்துவ மெனவுஞ் சொல்வர் சத்தையென் பார சத்தின்
வித்துநீ யென்ப ராருன் மெய்மைகண் டிடவல் லாரே. (14)

வேண்டிலார்க் குனது வண்மை விருப்பிலார்க் கன்பு நேயம்
பூண்டிலார் மருங்கு நேயம் பொருந்திட வுனது பண்பு
காண்டிலார் விழிக்க கன்று கரந்திடு குணத்தோய் விட்டு
மீண்டிலே னுனது பொற்றாள் விரிகயற் பொலிகண் ணாளே. (15)

கற்பதிற் பயனென் சாலக் காசினி முழுதுந் தாங்கி
நிற்பதிற் பயனென் மண்மேல் நீடுயிர் பொருந்தி யென்னே
முற்பவப் பிணிகள் போக்கும் கயல்விழி முதிரான் போடுன்
பொற்பதம் பணியார் துஞ்சிப பிறந்துதேய் புலையர் தாமே. (16)

வாய்கருமெவ் வலியும் பூண்டு வரமரு ளுவர்மு னிந்தே
மாய்கினு மாய்ப்ப ரீசன மாலயன் முதலோ ரீனற
சேய்க்குண மறிந்தே வேண்டா தேங்கினு மூட்டி யோம்பும்
தாய்க்குணம் நின்பா லன்றிப் பிறர்மிசை புனதோ சாற்றாய். (17)

பிறக்கினு மிறப்புத் தேற்றம் பீடழிந் தலகிற் பின்னர்
இறக்கினும் பிறப்பு மீளு மிகுதுணா தெரிந்து காயம்
துறக்கவும் அறியே னாங்கிச் சுமக்கவும் விரும்பேன் நாயேன்
சிறக்கவாழ் முறையுண் டோசொல் சேலெழிற் கண்ணி னாளே. (18)

இலையெனப் புகலுங் கன்ம மிருப்பினு மதுசா லாதென்
றலைபுமென் கொடிய சிந்தை அன்புளா ருளம் நிறைந்தே
நிலைபெறும் மணியே பொன்னே நெடியபொக் கிஷமே யென்றன்
புலையநெஞ் சலம்வாய்ந் தாறப் புரிவைசேல் பொலிகண் ணாளே. ()

நயப்பறும் பிறவி நோயால் நைந்துழப பழுகிப் பின்னர்
பயிப்புடக் குருகுங் கூற்றிப் பாடுநீங் காம லேபுன்
மயப்பவப் புணரி புக்கி மாயுநோய்க் கருமருந் தாங்
கயப்பக லமுதே உன்னைக் காணுமா றெதுசேற் கண்ணாய். (20)

ஆசையில் லார்க்கு நல்கு மன்புளாய் எளியேன் சற்றும்
மாசிலா திறைஞ்சி நின்றன் மலரடி யினையன் போடு
பேசியின் கமா வொண்ணுப பிழைசெய்யென் மடமைக் கஞ்சி
யோசனை யுன்பாற் செய்யின் அதுவமா ஆசையன்னாய். (21)

விஞ்சையர் துயர நீங்க மேதினி முழுதும் பொல்லா
வஞ்சனேர் நிருதர் துன்பத் திடைவருந் தாதன் றன்பு
மிஞ்சியே பேண ஆற்ற மீன்விழி நினது பொற்றாள்
தஞ்சமென் றடைந்த நாயேன் தளர்ந்திடன் முறையோ சொல்லாய்.

விண்டலந் தகர்ந்து நோக விறல்வலி வாய்ந்த காயும்
பண்டனைப் புதல்வ ரோடு பழுதறத் துடைத்த நேயக்
கொண்டலே கருணை யெல்லாங் கூடுமீன் விழியே நின்றன் [ய்.
தொண்டருட் கடைய னேனும் சோர்ந்திடல் முறையோ சொல்லா

மெய்யெனப் புகல்வர் சான்றோர் விரியுமா மறை விளக்கும்
துய்யதென் றுரைப்பர் ஞானச் சோதியென் றிடுவர் காயம்
கையவாய் மூடி யோகத் திறுதிகாண் நடுமை யென்பர்
வையக முனைவெவ் வேறாய் வழுத்திடுஞ் சேற்க ணாளே. (24)

---

## எழுசீர்க்கழி நெடில் விருத்தம்.

மாமறைச் சுடரே மதியினுட் டிகழும்
மர்மமே மருவிலா ரிதவே
யாமெனக் குறிகண் டேத்துமெய்ப் பொருளே
அன்புளார் முன்வருங் குருவே
காமருஞ் சீராம் நின்பதக் கழலைக்
கருதியே போற்றுமிப் புலைய
பாமரன் றனைநீ கைவிடன் முறையா
பைங்கயல் பொலிவிழி யெழிலாய். (1)

ஆரிடம் புகல்வே னென்குறை யொருகால்
அறிவிலாப் பேதையா னெனினும்
நேருறத் தாயென் ஞவிடிற் பிறிதார்
நினைவரோ யெனையுமா ளாக்கப்
பாரிலெங் குளரோன் போலுமெய் யறியாப்
பான்மையோர் கூடலம் பதியில்
சீரமர் பாண்டிப் புரவலன் புனிதச்
செல்வமாய் எழுந்தமீன் விழியாய். (2)

கற்பகத் தருவே கருணையங் கடலே
கருதுதற் கினியவா னமுதே
நற்பெருந் தவமே தவத்தெழுந் திருவே
நவிலவொண் ணாவிரத் தினமே
சொற்பெறும் பொருளே துரியபொற் சுடரே
சுகமெலாந் திரண்டசெங் கனியே
அற்பனென் றெனைநீ தள்ளிடா தருள்வாய்
அழகிய சேல்விழி யன்னாய். (3)

மாமறைப் பயனே மறையுமங் குரையா
மர்மமே மறைவலார் கருதுஞ்
சேமமே பெருகுந் திரவியக் கனியாய்த்
திரண்டுவாய்ந் திட்டபொக் கிசமே
பாமரற் கிசையாப் பான்மையே யுணரும்
பண்டிதற் கினியகற் கண்டே
காமருஞ் சேற்கண் பொலியிளங் கொடியே
கருணையோ டெனையுநீ காவாய். (4)

சுத்தமாங் குணமே துணையிலார் துணையே
தூயவர்க் கினியநல் லறமே
நித்தமே நினைவே நினைவினுக் குயிரே
நினைவொழிந் தார்கணான் னிலையே
அந்தணோர் பாகத் தமருமின் னொளியே
யரியமா தவர்தலைக் கணியும்
முத்தமே மணியே சேல்விழிப் பொலிவே
மூடனா னுய்முறை மொழியாய். (5)

நூலெலாம் புகலும் நாலுறை பொருளின்
தண்மை கண்டாரு மோதிடுவர்
பாலெலா முறைநெய் யெனவுல கிடைநீ
பரவிடுங் குணமெனப் புவியின்

மேலெலா மகற்றி நின்கழற் றுணையே
　　வேண்டியுன் பெயரினை யோதி
நூலெலா முறுமென் மாற்றமேன் பிழையா
　　நடிகயுற் றிகழ்விழி நவிலாய். (6)

கோதுளே னெனினு மென்றநின் பெயரே
　　கூறிமற் றோர்துணை மருவாப்
பேதையே னுளமிங் கோய்விலா தடையும்
　　பிணியுற னீதியா மொழிவை
மாதவத் தமர்வோர் மாமறைப் பொருளாய்
　　மாண்புளார் மிசையுற வாகும்
போதமே பாண்டிக் குலத்தொளி விளக்கே
புகலணங்சேல் விழிவனப் புடையாய். (7)

தனித்தமிழ்வேந்தின் றலைநகராய புதுவை
பண்டித சிகாமணி இராதாகிருஷ்ணசாஸ்திரிகள்
சிவபதமடைந்தபோது அவர்கள் நண்பருளொருவர்
பிரிவாற்றாது கூறிய

## சரமகவிகள்.

—:)(:—

ஆறாத் துயர்க்கடலி லாழ்த்தி யடியேமை
வேறாப் பிரிந்த விதமென்னே—கூறாய்
கருமமு முவர்ப்பக் கனிவாய் மறைநா
லரும்புமிரா தாகிருட்டி ணா. 1.

வேதனி யாதனென மேல்வர்கண் மன்புகழப்
பூதல மீதோர் புதுவைபுரீஇக்—கோதகற்றி
யென்றன்னைத் தேற்று மிணையிலிரா தாகிருஷ்ணா
வுன்றன்னைக் காணு நாளை. 2.

யானின் னிடத்துவைத்த விச்சைபெண்ணி லாயிரமாந்
தேனிகர்சொற் கோபியரைத் தேங்கவைத்தே—வானகர்க்குச்
சென்றாய் சிறியேனென் செய்வே னிதுநினக்கு
நன்றாரா தாகிருஷ்ணா. 3.

இந்து முகமும் பிணையிலி ருளகற்றும்
மந்த நகையும்யான் மாபாவி—யெந்நாட்
காண்பேன்ரா தாகிருஷ்ணா கற்றோர் கவின்முடிமேற்
பூண்பாத வாரிசப் போதா. 4.

பஞ்சவரை நீத்துப் பரமண் டலம்படைக
ளஞ்சடையான் சென்றநா ளாயிற்றே—விஞ்சுபுகழ்
ராதாகிருஷ்ணாவெளியே ஞாலத் தயர்ந்திடநீ
மீதா விரைந்தேகி னாள். 5.

தங்குமுட லொரீஇச் சச்சிதா நந்தமா
யெங்குநிறைநீந் தாய்ராதா கிருஷ்ணவிப்—பொங்குதுயர்
என்னுளத்துக் கண்டிலையோ வேனென்று கேளாது
துன்னுவது புண்ணியமோ சொல். 6.

கற்பிரம ருத்திரமு தன்ன மூபதிட்டமும்
கற்பதற்கி யார்பாற் கடையேமை—நிற்பதென்று
வைத்தாய்ரா தாகிருஷ்ண மாமறைகள் சொல்லும்வாய்
மைத்தாரா வாய்திறந்து சொல். 7.

புன்கண் சிறிதும் புகாமே யெனைக்காத்தோய்
என்கண் ணிழிதுன்பக் கண்ணீரை—முன்காணின்
ஆற்றுவையோ வையா வழகாவஞ் ஞானமிறச்
சாற்றுமிரா தாகிருட்டி ண. 8.

கற்பாருங் காரிகையார் காதலரா லாற்பிறரைப்
பொற்பால் விரும்புவரோ புண்ணியனே—நிற்பிரிந்தின்
கின்னுயிரா தாகிருஷ்ண வருவரோ நின்னடியார்
பன்னும் பிறர்பாற் பகர். 9.

கல்விக் கடல்கடக்கக் கப்பலாய் நின்றனையைப்
புல்வினையேன் போக்கிப் புலம்புகின்றேன்—நல்விருந்தாய்
நாகருக்குச் சென்றாய்நீ ராதாக்ருஷ்ணவுமையோர்
பாகருக்குப் பற்றானவா. 10.

ஓர் அன்பன்.

மூர்தவரு மும்மதமு மூவிசையி னேரிசையு
மந்தமா வார்க்குமுரு மாமலையே—சந்தமார்
வெற்புருவ மாமடிய வேல்விடுத்தார் மெய்த்தொண்ட
ரற்புருவ மாமடிய ரார்வு. (௩௫)

முற்படவரு மூன்று மதங்களை யானைகள் (வீதியிலே) ஒழுக்கும். மூன்று இராகங்களில் ஒரு இராகம் மந்த கதியாக முழங்கும்.

கண்டமைசொல் லார்விழிக்குங் காண்மங் கலஞ்சொலற்கும்
வண்ட ரமையுமுரு மாமலையே—தொண்ட
ரகமொன்று கந்தன் பருள்புரியி ராறம்
பகமொன்று கந்தன் பதி. (௩௬)

கற்கண்டின்சுவை பொருந்திய சொல்லையுடைய பெண்கள் கண்களுக்கு வண்டும் அராமும் (ஒவ்வாமல்) கெடும்; காணப்பட்ட சுபசெய்கைகளைக் கூறுதற்கு மங்கலப்பாடகர் பொருந்தும்.

முட்டுதொழின் முற்று முலையு முகிழ்முலையும்
வட்டுடையச் சீர்க்குமுரு மாமலையே—பெட்டு
வடிவேற் குமரன் மகளுக வந்த
வடிவேற் குமரன் மனே. (௩௭)

(ஆடவர் மார்பில்) மோதுகின்ற செய்கை முதிராத (மாதாது) இளங் கொங்கைகள் சூதாடுகருவியுடையச சிறப்புற்றிருக்கும். (அத்தொழில் வல்ல) தாமரையரும்புபோலுங் கொங்கைகள் கசினது உருவைத்தைப் பினைந்து வெளிச்செல்லும்.

பாலைக்கொள் சொல்லாரும் பங்கயத்தைப் பான்மதியு
மாலைக் கொடுக்குமுரு மாமலையே—வேலைக்
கெடுத்தகரக் கொன்று நிலங்குவே விற்சூர்
வடுத்தகரக் கொன்றூர் மனே. (௩௮)

பாலினினிமையைத் தன்வசமாக்குஞ் சொல்லையுடைய மாதர் (தம்மை விரும்பும் ஆடவர்க்கு) மயக்கத்தைத்தரும். பால் போலும் வெள்ளிய பெரிய சந்திரன் தாமரை மலரை மாலைக்காலத்தில் குவியச்செய்யும்.

கூட்டுங்கொள் வேதியர்பாற் கொண்கரைச்சேர் கோதையர்பால்
வீட்டடங் தவிருமுரு மாமலையே—நாட்டமொரு
மூன்றுரெட் டார்குருவாய் முன்னிருந்தா ரெவ்வுயிர்க்குஞ்
சான்றுரெட் டார்தந் தலம். (௩௯)

கூட்டமாகிய அந்தணரிடத்தில் ஒளிபொருந்திய நூல் (சாத்திரம்) பிரகாசிக்கும். கணவரைச் சேர்கின்ற மாதரிடத்து வாட்டம் நீங்கும்.

ஓதுசிவா சாரியரு மொண்டிறலோர் தூணிகளும்
வாதுளம் பார்க்குமுரு மாமலையே—தீதுதவிர்
செங்கையா ரோணத்தார் சிந்திக்குஞ் செய்யவே
லங்கையா ரோணத்தா ரார்வு. (௪0)

சொல்லுகின்ற ஆதிசைவர் வாதுளாகமத்தை யாராயும். ஒள்ளிய வலியுடைய வீரரது அம்பறாத் தூணிகளில் கலகத்தை நினைக்கின்ற பாணம் முழங்கும்.

கானந் திகழ்செஞ்சொற் கற்பினர்நெஞ் சங்களமு
மானந் திகழுமுரு மாமலையே—தானந்த
மாதியற்று னெங்கு மரகரவென் பார்க்கனுவுந்
தீதியற்று னெங்குமரன் சேர்வு. (௪௧)

இசைவிளங்குகின்ற செவ்விய சொல்லையுடைய கற்புடைப் பெண்கள் மனத்தினிடத்து மானம் பிரகாசிக்கும். (அப்பெண்கள்) கண்டம் பெரிய சங்கத்தை யிகழ்ச்சி செய்யும்.

ஆடகயாழ் வாசிப் பவருமுழ வாற்றுநரு
மாடகமு றுக்குமுரு மாமலையே தோடலர்பூங்
கைய மருமானார் காதலர்வான் காவலன்மால்
செய்ய மருமானார் சேர்வு. (௪௨)

பொன்னாற் செய்தவீணை வாசிப்பவர் முறுக்காணியை முறுக்கும். உழவுதொழில் செய்பவர் மாடுகளை வீட்டினிடத்துப் பொருந்தும்படி சேர்க்கும்

அந்திக்குங் காமுகரை யாண்மகப்பே றுமறத்தை
வந்திக்கு மோதுமுரு மாமலையே—சிந்திப்பார்க்
கன்பா லருளொருவ ரைம்முகத்தெ மையனரு
ளன்பா லருளொருவர் நாடு. (௪௩)

அகெக்கின்ற விரகியரைக் கருப்புவில் வந்து தாக்கும். புத்திரப்பேறுண்டார்ந்தருமத்தை மலடிக்கும்போதிக்கும்.

செய்க்கோல மள்ளரும்போர் செய்களத்துன் றோர்பருந்தும்
வைக்கோ லுணக்குமுரு மாமலையே—பொய்க்கோல
மாயனா ராயுமுள்ளார் மாமருகர் மன்னுயிர்க்குத்
தாயனா ராயுமுள்ளார் சார்பு. (௪௪)

வயல்களிடத்து அழகிய உழவர் வலைக்கோல் காய வைக்கும். யுத்தக்க ளத்தில் மாமிசத்தை விரும்புகின்ற பருந்து (அவ்விசசையால்) கூரிய பாண த்தினிட்டதுச் சுவைக்கும்.

தேசமைபுங் கொண்மூவுஞ் செந்தா மரைத்தடமும்
வாசவனங் கூருமுரு மாமலையே—காசறையுண்
மட்டிப்போ தித்தார்ப்பா மாதுகேள் வன்றன்னைக்
குட்டிப்போ தித்தார் குடி. (௬௫)

அழகமைந்த மேகத்தை யிந்திரனங்குச் செலுத்தும். செவ்விய தாமரை ப்பொய்கையில் மணக்கின்ற சுவம் மிகும்.

உன்னருமின் னார்முலைக்கு மோர்வகைக்கி ளிக்குமஞ்சு
வன்னஞ் சிறக்குமுரு மாமலையே—முன்னம்
புனக்குறவ ரானூர்கொள் பூவைமணஞ் செய்தா
ரெனக்குறவ ரானூ ரிடம். (௬௬)

நினைத்தற்கரிய பெண்கள் கொங்கைக்கு (ஒப்பாகாமல்) சூதாகெருவி னைந்து இறந்துபடும். ஒருவிதமான கிளிக்கு அஞ்சு நிறம் சிறந்திருக்கும்.

போரமையும் வீரரும் பொன்மலரும் பூங்கணியும்
வாரம் புணருமுரு மாமலையே—நாரதனார்
மன்மகத்து வந்தங்கு வாய்த்தவச வாகனத்தார்
மன்முகத்து வந்தங்கு வாழ்வு. (௬௭)

யுத்தம்பொருந்திய வீரர் நீண்டபாணங்களை யாராயும். பொன்போல் மலரும்பொலி வினையுடைய வேங்கைமரங்கள் மலைப்பக்கத்தைச சேர்ந்தி ருக்கும்.

கற்சுனையின் பூம்புனலுங் கற்புடையின் னார்களமு
மற்சங் கொழிக்குமுரு மாமலையே—நற்சங்கத்
தார்கலக முற்றா தகற்றின் றென்னெஞ்சா
யூர்கலக முற்றா ருமை. (௬௮)

கல்லிடத்துள்ள சுனையின்பூக்களையுடைய நீர் மீன்களைக்கொழிக்கும். கற்புடைய பெண்கள் கண்டம் வலிய சங்கினைக்கெலிக்கும்.

மேனகைக்நேர் மின்னார்கண் வேலில் விழாத்தெருவின்
மானஞ் சுழலுமுரு மாமலையே—பானல்வே
லம்மைமண வாளரநே ரம்பகங்க ளார்வள்ளி
யம்மைமண வாள ரகம். (௪௯)

மேனகைபோன்ற பெண்கள் கண்ணாகிய வேலில் மயக்கத்தைச் செய்யு நெஞ்சு சஞ்சரிக்கும். திருவிழா நடக்கும் வீதிகளிலே தெய்வ விமானங்கள் சுற்றி வரும்.

தேசுமைபொன் சேரிடமுஞ் சிட்டருஞ் செம்மினமு
மாசஞ் சரிக்குமுரு மாமலையே—நேச
மிலங்கவரு வானோ ரெதிராசுர ரெய்தும்
புலங்கவரு வானோர் பதி. (௫௦)

அழகமையுந்திரவியஞ் சேருமிடத்தில் இலக்குமிசஞ்சரிக்கும். ஞானிகள் *ஐவகைக்குற்றங்களைக் கெடுக்கும். செல்லுகின்ற தினங்கள் மாதத்தைக் குறைக்கும்.

ஒண்டளிப்பூங் காமதுவு மொத்தவிதை வித்துநரு
மண்டலச்சால் பாயுமுரு மாமலையே—தண்டமிழ்க்கு
மூலப் பொதிகையினர் முந்து முனிக்கருள்வேல்
சாலப் பொதிகையினர் சார்பு. (௫௧)

ஒள்ளிய தளிர்களையுடைய பூஞ்சோலையிலுள்ளதேன் நெருங்கிய கலப்பையுழுஞ் சாலிலே பாய்ந்தோடும். பொருத்தமாகிய விதைகளை விதைக்கின்ற உழுநர் நிலத்தின் குணத்தையாராயும்.

மூளமர்மின் னார்கட்கு முன்னு முலைக்குமுன்னும்
வாளஞ் சலிக்குமுரு மாமலையே—காளமன்று
நல்லவிசா கத்தா னயந்துநுகர் நம்பனருள்
வல்லவிசா கத்தான் மனை. (௫௨)

மாதர்கள் மூளுகின்ற போரையுடைய கண்களுக்கு நேரில் வாளாயுதங் கும்பிடும். (அவரது) தனத்துக்குநேரில் சக்கரவாகப்பறவை சோர்வடையும்.

---

* ஐவகைக்குற்றம் பஞ்சேந்திரியம்.

ஓதுமின்னா ரின்சொல்லு மோர்வகை யோகியரு
மாதுரிய மண்டுமுரு மாமலையே—யோதுகையிற்
றத்துரிணக் கத்தர் தரும்பாலர் சாதுவராம்
பத்தரிணக் கத்தர் பதி. (௫௩)

(யாவருமெடுத்து)சொல்லும் பெண்களின் வார்த்தைமதுரஞ் செறிந்திருக்கும். ஒருவிதமான யோகஞ்செய்பவர் பெரியதுரியநிலையடுத்திருக்கும்.

வெள்ளம் படர்நதியில் வீரர்போர் வெல்வில்லில்
வள்ளம் படருமுரு மாமலையே—புள்ளவல
மாறுவத னத்தா ரகலவன்று குட்டியரு
ளாறுவத னத்தா ரகம். (௫௪)

வெள்ள நீர் செல்லுகின்ற ஆற்றில் வள்ளம் செல்லாநிற்கும்.( வள்ளம் நாவாய் வகையுளொன்று)வீரர்கள் யுத்தத்தில் வெல்லுகின்ற வில்லிற்கூரிய பாணங்கள் நெருங்கும்.

ஒண்சஞ் சிதத்தைமுனி வோரு முழுதும
வண்சங் கரிக்குமுரு மாமலையே—யெண்சங்க
வாணரொடுங்காத லுற்று வந்திருந்தார் வைவேற்கை
யாணரொடுங் காதவ ரில். (௫௫)

இருடிகள் [தம்மிடத்துப்) பொருந்திய சஞ்சிதகன்மத்தை யவ்விடத்துக்கெடுக்கும். உழவர்கள் அந்தவளந்தங்கிய சங்குகளை (நீரில்)அரித்தெடுக்கும்.

சாரம் புயனின்று தண்பயிர்க்குஞ் சற்சனர்க்கும்
வாரம் பிறங்கு முரு மாமலையே—யோம்ப
னந்தமைய னென்பா ரரவோ டணியுமா
னந்தமைய னென்பார் நகர். (௫௬)

குளிர்ந்த பயிர்களுக்குச் சார்ந்த அழகிய மேகத்தினின்று நீண்டநீ (வளர்ப்பதற்குக்கீழே) வரும். சாதுக்களுக்கு அன்புவிளங்கும்.

ஞாயமுணர்ந் தோர்களுமின் னார்மயலை ஞானிகளு
மாய மறுக்குமுரு மாமலையே—பாயுயிர்பா
லோடுகுடி யேற்றினா ரொன்சுதர்வா னோரையும்பூ
நாடுகுடி யேற்றினார் நாடு. (௫௭)

நியாயத்தையுணர்ந்தவர்கள் பொய்யையறுத்தெறியும். பெண்கள் மயக்கத்தை மாயும்படி ஞானிகள் தடுக்கும்.

கல்விலங்கு தோள்வயவர் கையுங் கவுண்மதமும்
வல்விலங்கு கக்குமுரு மாமலையே—நல்விலங்கைக்
கொண்டருச்சி யாரடியார் கூட்டறச்செய் கோமகனு
ரண்டருச்சி யாரடியா ரார்வு. (௫௮)

மலைவிலகிச்செல்லும் புயங்களையுடைய வீரர்கள் கரம் வலிய வில்லை யவ்விடத்துமகிழும். கன்னமதத்தை யானைகள் கொட்டும்.

பானலஞ்சொல் லார்விழியும் பல்வினைவார்ப் பாரெவரும்
வானம்ப ராவுமுரு மாமலையே—கானந்
திகழ்குரவ னுனன் றிருவுளஞ்சிந் தித்துப்
புகழ்குரவ னுனன் புரி. (௫௯)

பால்போலு நல்ல அழகிய சொல்லையுடைய பெண்கள் கண்கள் பெரி யபாணங்களை யறுக்கும். பல வினைவுப் பதார்த்தங்களை நிறைப்பவர்கள் ம ழையைத் துதிக்கும்.

மேலமரர் நெஞ்சில் விரிமலர்ப்பூ மென்காவின்
மாலதிகர் துன்னுமுரு மாமலையே—காலங்
கடந்திருந்த வையார்வேற் கந்தரொன் றுங் கல்லார்
மடந்திருந்த வையார் மனே. (௬௦)

ஆகாயத்திலுள்ள தேவர்கள் இருதயத்தில் மயக்கத்தை நீங்கி நினைக் கும். விரிந்த மலர்களையுடைய மிருதுவாகிய சோலையிலுள்ள சிறு சண்பக மரங்கள் மேகத்தில் நெருங்கும்.

பூசித்து நூலைப் புலவரும் பொய்கையுளும்
வாசித்துப் பாடுமுரு மாமலையே—பூசநாண்
மாவிரத ரத்தினமே வாழ்வுபெற வந்தருளுந்
தீவிரத ரத்தினர் சேர்வு. (௬௧)

வித்துவான்கள் இலக்கண விலக்கியங்களைப் போற்றிப் படித்துப்பாடு ம். தடாகங்களின் மத்தியிலே மிகுதியாகிய பவளக்கொடிகளசையும்.

உய்கையாற் றுமதனை யொண்டொடியா ருந்நீறும்
வைகையாற் றாறுமுரு மாமலையே—பொய்கையினி
லுத்தமாங் கந்தானு றுற்றவும்ப லாலென்றன்
சித்தமாங் கந்தானன் சேர்வு. (௬௨)

பிழைத்தலைச் செய்யாத மன்மதனை மாதர்கள் வைவினாலே கிந்திக்கும். தண்ணீர் தங்கிய அழகையுடைய நதிகளிலூறிப் பெருகும்.

ஆய்பவர்மேம் பாடுறற்கு மங்கையா ரங்கட்கும்
வாய்மையறத் தீட்டுமுரு மாமலையே—பாய்மையினு
மேறிவரு வானவன்சீ ரேத்து மெனக்கருளு
மேறிவரு வானவன்சே யில். (சுஙு)

(நூல்) ஆராய்ச்சி யுடையார் (தாம்) மேன்மை யடையும் பொருட்டு மெய்யாகிய தரும வழியிலே (பொருள்) சம்பாதிக்கும். பெண்கள் அழகிய கண்களுக்குப் பொருந்திய மையை மிக எழுதும்.

ஆசறுமின் னுரிடையு மன்பாகன் னூர்தனமு
மாசுணங் கொல்லுமுரு மாமலையே—வாசமிகு
மங்கடம்பன் தாராருள் என்பிலார்க் கஃதுளார்
தங்கடம்பன் தாரார் தலம். (சுச)

குற்றமற்ற பெண்கள் இடை பாம்பை (உவமை யாகாமற்) கெடுக்கும். கணவரைப்பிரிந்த மாதர் தனம் பெரியதேமலைப்பொருந்தும்.

அத்தந்தேர் வார்களிட மங்கையார் கொங்கைபெரு
மைத்தந் திமைக்குமுரு மாமலையே—நித்தல்
புகழா ரியனுவார் போற்றுசிவ னுக்குந்
திகழா ரியனுவார் சேர்வு. (சுடு)

பொருளாராய்ச்சியுடையாரிடத்தில் பெருமை பொருந்திய சாஸ்திரம் பிரகாசிக்கும். பெண்கள் தனம் பெரிய கரிய யானையைக்கெடுக்கும்.

தானமிசை யாழிசையுந் தண்டலையிற் றண்கனியும்
வானரம் புய்க்குமுரு மாமலையே—தானவரைச்
சங்கரிக்கு மைந்தன் றமையவே ருங்கிசின்றோன்
சங்கரிக்கு மைந்தன் றலம். (சுசு)

(பாடுகின்ற) இடங்களிசைந்த வீணையினுலாகிய இசைப்பாட்டை வெளிய நரம்பு செலுத்தும்; சோலையிலுள்ள குளிர்ந்த பழங்களைக் குரங்குகள் பிடுங்கும்.

மின்மேலிபொற் றுதலர்பூ மென்காவில் வீரரில்
வன்மஞ் சொலிக்குமுரு மாமலையே—முன்முனிக்கு
மாசித்த வாசிரிய மன்னு கலைகளுய
தேசித்த வாசிரியன் சேர்வு. (சுஎ)

பிரகாசம் மிகுந்த பொன்போலு மகரந்த நிறைந்த பூக்களையுடைய செவ்விய சோலையில் வலிய மேகங்கள் முழங்கும். சுத்த வீரர்களிடத்து வாது பிரகாசிக்கும்.

ஊணாப்பன் னூற்சுவையை யோதுவித்தோர்க் குள்ளன்பை
மாணாக்க ருந்துமுரு மாமலையே—நீணா
ளொழியா மலங்கடுத்தா ரும்பரு ரென்று
மொழியாம லங்கடுத்தா னார். (சுஅ)

பல நூல்களிலுள்ள (சொற்பொருட்) சுவைகளை (அந்நூலாய்வார்) மாட்சிமைப்பட்ட நாக்குகள் உண்ணும். நூல் கற்பித்த ஆசிரியர்கட்கு உள்ளன்பை மாணாக்கர்கள் செலுத்தும்.

மேனடக்குந் தெவ்வருக்கு வீரருங் கம்மியரு
மானவர்க்கம் பாற்றுமுரு மாமலையே—வானவர்க்கு
முன்பொருதா ரஞ்சமைத்தார் மோகமிகு வள்ளியெனு
மன்பொருதா ரஞ்சமைத்தா ரார்வு. (சுகூ)

வீரர்கள் (தம்மேல் போருக்கு) நடந்து வரும் பகைவர்க்கு மானத்தின் வகையைக்கெடுக்கும். கம்மாளர்கள் வீரருக்காகப் பாணங்கள் செய்யும்.

இன்னிசையின் னார்மொழியி னின்பா ரிணைமுலையில்
வன்னிகரந் தோயுமுரு மாமலையே—நன்னிலையா
மொற்றுமையி லார்பதியா ரோவவர்க்கெட் டாரன்பிற்
பற்றுமையிலார் பதி. (எO)

பெண்கள் இனிய இசைபோன்ற வார்த்தையினால் கிளிகள் மறைந்து அயரும். (அவரது) சுகநிறைந்த கொங்கைகளில் சூதாடு கருவியின் அழகு படியும்.

தொண்டர் சிவனாரைத் தூமலரிற் சூழ்பெடையை
வண்டளியி னாடுமுரு—மாமலையே—தண்டரள
மாலை முலைமலைவார் வாய்வள்ளி வண்குழற்கு
மாலை முலை மலைவார் வாழ்வு. (எக)

அடியார்கள் சிவபிரானை வளர்தங்கிய கோயிலிலராயும். பரிசுத்தமாகிய பூக்களில் சூழப்பட்ட பெட்டை வண்டுகளை (ஆண்) வண்டுகள் அன்புடன் புணரும். (ஆடல் புணர்ச்சி செய்தல்.)

வீறடியா ருங்கா மிகட்குவில்வேண் மெய்ம்முரசு
மாறவ முழக்குமுரு மாமலையே—கூறுமுக
மாங்க மலங்களைந்தார்க் கங்குருவா ஞரடியே
ஞெங்க மலங்களைந்தா ரூர். (எஉ)

பெருமை தங்கிய தொண்டர்கள் விரோதமாகிய பொல்லாங்குகளைக் கெடுக்கும். விரகிகட்காக (கரும்பு) வில்லையுடைய மன்மதன் உண்மையாகிய (கடல்) முரசத்தை மயக்கமிகும்படி முழக்கும்.

பூணியலாய் வார்நாவிற் பூவைசிய ராவணத்தில்
வாணிகந் தெட்டுமுரு மாமலையே—பேணி
யமரங்கை யார்தந்த·வாருன னத்தர்
சமரங்கை யார்தந் தலம். (எங)

பொருந்திய தமிழையாராய்வார் நாவில் சரஸ்வதி பற்றுக்கோடாக அகப்படும். அழகிய வைசியர் கடை வீதியில் இலாபத்தைத் தெளியும்.

திண்டடத்தோண் மள்ளாற் சேராருஞ் சீரனமும்
வண்டடத்தி யங்குமுரு மாமலையே—தொண்டர்
மதித்தா யுமைதனையன் வாமத்தார் காந்தி
மதித்தா யுமைதனையன் வாழ்வு. (எச)

வலியமலைபோன்ற புயங்களையுடைய வீரராலே பாணங்கள் கொல்லப் பகைவர் வருந்தும். சிறப்புத்தங்கிய அன்னப்பறவைகள் வளர்ந்தங்கிய தடாகத்திலே சஞ்சரிக்கும்.

ஆமருக னுண்மகிழ வண்டரகங் காரமற
மாம னடக்குமுரு மாமலையே—காமம்
பொருமுருகாற் றுப்படையார் புந்திக்கெட் டாதார்
திருமுருகாற் றுப்படையார் சேர்வு. (எரு)

ஆகிய மருமகன் மனமகிழ மாதுலன் கடந்துகொன்றும், பகைவாது செருவங்கெட்டுப்போக அரசன் ஒடுக்கும்.

ஊட்கா வுயவ ருரத்தில்வேண் டுந்நாளில்
வட்காரம் பெய்யுமுரு மாமலையே—புட்காதல்
செய்யு முடம்பிடியார் சிந்தித்துச் சேவிப்பா
ருய்யு முடம்பிடியா ரூர். (எசு)

அஞ்சாதவீரர் மார்பிலே பகைவர்பாணத்தையெய்யும். வேண்டுங்காலத்தில் வளர்ந்தங்கிய மேகமழைபெய்யும்.

பூசலிலா யோகியரிற் போகமின்னார் வாயிலஞ்சு
வாச மடங்குமுரு மாமலையே—நேசமுட
னெண்ணம் பகருவர்வா யிற்றுயில்வ ரேத்திலுய்யும்
வுண்ணம் பகருவர் வாழ்வு. (எஎ)

(இந்திரிய)சண்டையில்லாத ஞானிகளிடத்தில் அழகிய மூசசுத்தம்பித்து நிற்கும். போகத்துக்குரிய பெண்கள் வாயில் பஞ்சவாசந்தங்கும்.

தன்னாட் திகழ்வயலுஞ் சங்கப் புலவரும்
வன்னாக் திருத்துமுரு மாமலையே—நண்ணு
முடம்பமலர் மாலையா ருள்ளத் துறுதார்
கடம்பமலர் மாலையார் காப்பு. (எஅ)

குளிர்சசியுமழுகும் விளங்கும் வயல்கள் (தமிடத்து)வளர்ந்தங்கிய சங்குகளைத் தங்கச்செய்யும். சங்கவித்வான்கள் வண்ணப்பிரபந்தநூலைத்திருத்தஞ்செய்யும்.

கன்மா டமுமரற்குக் கம்மியன்செ யாப்பணியும்
வன்மீக முந்துமுரு மாமலையே—பன்மீனு
ளாறுமீன் ருயானு ரத்துவளர்ந் தாரெறும்பு
காறுமீன் ருயானுர் காப்பு. (எகூ)

கல்லாலாகிய மாளிகையில் வலிய மேலிடத்துள்ள மேகங்கள் முற்பட்டுவரும். சிவபிரானுக்குக் கம்மாளராற் செய்யப்படாத ஆபரணங்களைப்புற்றுக்கள் செலுத்தாநிற்கும்.

பூரிக்கு மாலையினிற் பூந்தாதைப் புள்பூவில்
வாரிக குடையுமுரு மாமலையே—சூரார்த்
திருத்த வுருத்தரித்தார் செய்யதினைக் காட்டுள்
விருத்த வுருத்தரித்தார் வீடு. (அ0)

நிறைகின்ற யந்திரங்களில் நீண்டகரும்புகள் உடைபடும். பொலிவையுடைய மகரந்தத்தைப் பூக்களில் வண்டுகள் அள்ளிக் கிண்டும்.

ஒன்னலரைச் செய்யதவ முன்னமயி லூஏற்றுவ்வரை
மன்னவன் றுக்குமுரு மாமலையே—மின்னமுஞ்
சிந்தைக் கருளினன் சிக்கச்செ யான்ஞான
தந்தைக் கருளினன் சார்பு. (அக)

பகைவர்களை அரசர்கள் மோதும். செவ்வையாகியதவத்தை மெய்யாகச் செய்பவரை நிலைபேறுற வண்மைக்கேயுயர்த்தும்.

சாலுமியற் றோணிவிடு தற்குஞ்சீர்த் தக்கோர்க்கு
மாலுமியப் பண்ணுமுரு மாமலையே—நூலியல்சன்
மார்க்கரகத் தன்புருவாய் வந்தருள்வான் வார்வடிவேற்
போர்க்கர கத்தன் புரம். (அஉ)

மிக்க அழகுடைய தோணிவிடுதற்குக் கப்பலோட்டுஞ்றவன் நிலையடுத் துவரும். சிறந்த வுயர்ந்தோர்க்கு மயக்கத்தைக் கெடச்செய்யும்.

தேவினையர்ச் சிக்கச் செழுந்தழையைச் செவ்வரை
மாவிளங்கு விக்குமுரு மாமலையே—பூவிலுயர்
வாவெண்பாக் கொண்டாரா மங்கடம்பா கச்சிறிய
னுவெண்பாக் கொண்டார் நகர். (அக)

சிவபிரானைப் பூசிக்கச் செழிக்கு மிலைகளை வில்வமரங்கள் பெருக்கும். ஐசுவரியவான்களை யிலக்குமி பிரகாசிக்கச்செய்யும்.

தொக்க பலகலையுந் தூயசிவ ஞானிகளு
மக்களாங் காயுமுரு மாமலையே—மிக்ககா
மத்தருக் குத்தமர்பால் வாரா வடிவேலர்
பத்தருக் குத்தமர் பற்று. (அச)

கூடிய அநேகநூல்களைப்பிள்ளைகள் அவ்விடத்து ஆராயும். பரிசுத்தமாகிய சிவஞானிகள் (மும்) மலத்தின் கள்ளத்தைக்கோபிக்கும்.

நல்குவா ரேழைகட்கு நாரியர்க ணன்முலைக்கும்
வல்சி தருமுரு மாமலையே—புல்குமின்னார்
காமவிச்சை யுந்தருவார் காமனைக் காய்ந்தாற்குச்
சேமவிச்சை யுந்தருவார் சேர்வு. (அரு)

ஈகையாளர் வறியவர்க்கு அன்னங்கொடுக்கும். பெண்களது நல்லகொங்கைக்கு (ஒப்பாகாமல்) சூதாகெருவி யொடிபடும், (உருவழியும்.)

ஆசிலன்பர் நெஞ்சதினு மங்காவி னுச்சியினு
மாசிவந் தீண்டுமுரு மாமலையே—பாசியனு
டாமாலை யன்பார்மேல் வாழ்ந்தவந் தார் வள்ளிமனப்
பூமாலை யன்பார் புரி. (அசு)

குற்றமில்லாத அன்பரிருதயத்தில் மதத்தாகிய சிவம் பரிசிக்கும். அந்தியசோலையினுச்சியிலே மதகக்ஷத்திரம் வந்து நெருங்கும்.

ஏய்விருந்தை யெல்லாரு மின்பயிர்க்கீ யும்மழையும்
வாய்விண் டழைக்குமுரு மாமலையே—நோய்தந்து
தொன்மயனுங் கந்தமலர்க் கோதையர்பாற் கொள்ளாதான்
சின்மயனுங் கந்தன் றிசை. (அஎ)

பொருந்திய விருந்தை யாவரும் வாய்திறந்தழைக்கும். இனிய பயிர்க்குப் பெய்யுமழையும் பொருந்திய மேகத்திலே தழைத்திருக்கும்.

பேர்தமுணர் யோகியரும் புட்களுக்குப் பூமலரு
மாதவமி குக்குமுரு மாமலையே—வேத
முடிவா யிருந்தவர் மோனத்தின் ஞான
வடிவா யிருந்தவர் வாழ்வு. (அஅ)

ஞானத்தையறிந்த (சிவ) யோகிகள் பெரியதவத்தை மிகசெய்யும். வண்டுகளுக்குப் பூவாகிய மலர்கள் கள்ளைச்சொரியும். மாதவம் - கள். இகுத்தல் - சொரிதல்)

நன்றகன்பொய் கைக்கரையை நற்றிரையு ஞானிகளு
மன்றவக தெற்றுமுரு மாமலையே—யென்றமிழை
வள்ளி யுரையா மகிழவர் வழுவென்ன
வெள்ளி யுரையா ரிடம். (அகூ)

நன்மைதங்கிய விசாலமாகிய தடாகத்தின் கரைகளை நல்ல அலைகள் மிகவந்துமோதும். ஞானிகள் மிகுதியாகிய தவத்தைத்தெளியும்.

நாரியர் மாமுலையி நன்னதியி லோடோறும்
வாரி வருமுரு மாமலையே—சீரியமூன்
றந்தவளத் தங்கொடுவா ரார்மார்ப ரம்மான்பால்
வந்தவளத் தந்தொடுவார் வாழ்வு. (கூ0)

பெண்களுடைய பெரியதனங்களில் தினந்தோறும் கச்சு வறியிருக்கும். நல்லஆற்றில் தினந்தோறும் வெள்ளம்வரும்.

அத்தனார் வேணியிலு மாயர்தயிர்த் தாழியிலு
மத்தங் கடக்குமுரு மாமலையே—சித்தங்
கரவணப் பொய்கையார் காணாற் கரியாச்
சரவணப் பொய்கையார் சார்பு. (கூக)

மூங்கில் போலும்பசிய தோளையுடைய பெண்கட்கு மிருதுவாகிய அமிர்தம் இதழாகிய பவளத்திலே நிறையும் - (வாய் ஆகுபெயர்) இளஞ்சோலைகள் பொருத்தமாக வளர்ந்தோங்கி யிருக்கும்.

சீரியபோர் செய்வார்கண் செய்சூழ் செழும்பொழிற்கண்
மாரி கறங்குமுரு மாமலையே—பாரி
விருமனைவி தந்தா ரெனுமாலை யீவான்
றருமனைவி தந்தார் தலம். (௯௭)

சிறந்தயுத்தஞ் செய்வா ரிடத்துப் புயவலி தங்கும். வயல்கள் சூழ்ந்த செழித்த சோலையினிடத்து மேகமுழங்கும்.

பூந்தருவாங் கற்பகத்தைப் புன்மையைப் போத்தையு
மாந்தரு மாணுமுரு மாமலையே—சாந்தனையுந்
தீயவையாக் கருதினுஞ் செய்வதற்கென் சிந்தமலை
யேயவையாக் கிந்த ரிடம். (௯௮)

பொலிவுதங்கிய தருவாகிய கற்பக விருக்ஷத்தை மாமரங்களாகும். அறிவுகெடு மனிதர்களும் அற்பத்தனத்தை நீங்கும். (ஆறுதல் - நீங்குதல்)

செஞ்சிலரத் கன்பரன்பா நீரான்மின் னார்நடையான்
மஞ்சன மாட் டுமுரு மாமலையே—வஞ்ச
மனத்தவுணர் வாயார்வேல் வாங்கிவிட்டார் வாழ்ந்தார்
கனத்த வுணர்வாயார் காப்பு. (௯௯)

சிவபிரானுக்கு அடியார்கள் அன்பாகிய நீரால் மனத்தின் திருமஞ்சனஞ் செய்யும். பெண்கள் நடையால் அழகிய அன்னப்பக்ஷிகளைக் கோபிக்கும்

கானதியு ஞானிகளுங் காமனைக் காமிகளு
மானந் துகைக்குமுரு மாமலையே—பானதிரு
நெல்வேலி யங்கத்தர் நேய மதலையாம
வெல்வேலி யங்கத்தர் வீடு. (௧௦௦)

காட்டாறுகள் பெரிய சங்குகளைச் செலுத்தும். ஞானிகள் மானத்தைக் கெடுக்கும். மன்மதனை காமிக்கவர்கள் மயக்கமிருந்து வெறுக்கும்

---

முற்றுப்பெற்றன.

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

சிவபிரானுடைய சடையில் ஊமத்தம் பூக்கள் தங்கும். இடையர்களுடைய் தயிர்ப்பாத்திரத்தில் (தயிர்கடையும்) மத்து அவ்விடத்து உல்ளொடுங்கும்.

சிர்த்தை யலர்முலைபுஞ் செந்நாவுஞ் செய்யநய
வார்த்தை வருமுரு மாமலையே—பார்த்தியற்றுஞ்
சீர்த்திகைக்கு வந்தசித்தர் செய்பூ சனைவிரதங்
கார்த்திகைக்கு வந்தசித்தர் காப்பு. (கூ௨)

சிறப்புத்தங்கிய பெண்களுடைய தனங்கள் சிவந்த அழகிய கச்சைப் பரிசிக்கும். செவ்விய நாவினிடத்து ஒழுங்காகிய நல்ல சொற்கள் வராநிற்கும்

கொஞ்சுதாய் மார்மகிழக் கோற்றொடியார் கூந்தல்கொள
மஞ்சரி சிக்குமுரு மாபலையே—விஞ்சிவரு
மைவேலை யேவினன் மாய்ப்பதரி தென்றோ
கைவேலை யேவினன் காப்பு. (கூ௩)

கொஞ்சுகின்ற தாய்மார்கள் சந்தோஷிக்க மைந்தர்கள் புன்சிரிப்புஞ் செய்யும். (இசித்தல் - சிரித்தல்.) பெண்கள் கூந்தல் கொள்ளும்படி பூ மாலைகள் (வேண்டியமட்டும்) கிடைக்கும். (கூந்தல்கொள- கப்பல்வெற்பென்றது போலும்)

வீரம்பாற் றெவ்வருக்கு மிக்கவெழின் மேவினர்க்கு
மாரன் றுணையுமுரு மாமலையே—பார
மாழவாளி யங்கணனார் மைந்தர் மானிய
வெழுவாளி யங்கணனா ரில். (கூச)

வீருடைய பாணங்களாற் பகைவருக்கு மார்பு அப்பொழுது உள்ளே துன்பப்படும். அதிக அழகு பொருந்தின ஆடவர்க்கு மன்மதன் சமானமாகும்.

பானலஞ்சொல் லார்விழியும் பலபோர் பயிலுவரு
மானம் பொறுக்குமுரு மாமலையே—யானுந்
தெருமந்தா னிற்குமருள் செய்வலென்றான் செவ்வே
டருமந்தா னிற்குந் தலம். (கூ௫)

பால்போலும் நல்ல அழகிய சொல்லார் கண்கள் மானையும் பாணத்தையுந் தண்டிக்கும். பலவகை யுத்தப்பயிற்சி செய்வோர் வீரத்தைத் தாங்கும்.

வேய்ப்பசுந்தோண் மின்னார்க்கு மெல்லமுது மென்பொழிலும்
வாய்ப்புவள மல்குமுரு மாமலையே—தூய்ப்பரிய
வெள்வார ணத்தருவான் மென்மகளை வேட்டோன்சீ
ருள்வார ணத்தருவா னூர். (கூ௬)

எமது பாரதநாட்டுப்

> பெண்பல்லார் வயிற்றினுமக்கற்
> பேரறிஞர் போற்புதல்வர் பிறந்து வாழ்க

என்னும் கருத்துடைப்பாட்டு தமிழிற்கே புதுவதாக் தென்று பலரும் எளிதிற் கண்டுகொள்ளற் கிசையும். நடிப்புச்சுதேசி, மேத்தா திலகருக்குச் சொல்லுவது முதலியகீதங்கள் சங்கீதத்துடன் பாடின் கேட்பவர் மனத்தைப் பரவசப்படுத்துமென்பது திண்ணம்.

மாஜினி இத்தாலிதேசத்து "யௌவன இத்தாலி" என்ற சங்கத்திற் செய்துகொண்ட பிரதிக்கினை அநேககாலம் ஆண்மைக்குணம் இழந்த அலிகளையும் அரைக்கணத்தில் அதிவீரனாக்கி விடுமென்பது சொல்லவும் வேண்டுமோ?

> "மற்றைநாட்டவர்முன்னின்றிடும் போழ்து
> மண்டுமென் வெட்கத்தினை"

> "வேற்றுநாடுகளில் அவர் துரக்துண்டு
> மெய்குலைந்திறந்துமேபடுதல்
> ஆற்றகிலாராய் எம்மருநாட்டின்
> அன்னைமாரழுங் கண்ணீரனை"

என்னும் வரிகள் யாவரைத்தான் வீராவேசமடையும்படி செய்யாது. இனியினும் தெளிவாய்ச்சொற்களாற் சித்திரிப்பது மிகவும் அருமை. நாடெனும் சுவரில்மதியெனும் கோல்கொண்டு தீட்டியசித்திரம் சுவருள்ள காலம்வரைத்திரிசற்றுத்துலங்குமென்பது சொல்லவும்வேண்டுமோ? சுதந்திரம்வேண்டிச் சோல்வியில் சண்டை விதந்துமேசெய்பவர் விழினும் விழுவர். அவர் மகார் அன்னார் ஆணை சிரமேற்கொண்டு வெற்றிபெறுதலும் காலக்கிரமத்தில் நடப்பதுதானே. அதனால் மேற்கூறியபயிர் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து தக்க காலத்தில் மிக்க விளைவினைக் கொடுக்கும்படி செய்யும் ஒவ்வொருவகை யுபாயமும் அன்பு பாராட்டத்தக்கதே.

பத்திராதிபர்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR MADRAS-41.

## மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள்

# பிரபந்தத்திரட்டு.

இராமனுதபுரம் சமஸ்தானத்தில் ஸ்ரீமாந் பொன்னுச்சாமித்
வரவர்களால் கவிச்சிங்க நாவலர் என்னும் பட்டங்கரப்பெற்று உல
பிரசித்தியடைந்திருந்த வித்வரத்தினமான இப்புலவர்பெருமா
நம் தமிழ் மக்கள் யாவரும் கேள்வியாலறிந்திருப்பரென்றே நினை
லாம். இக்கவிகேசரியாரியற்றிய பிரபந்தங்களும் தனிக்கவிகளும்
லாம். ஒவ்வொருகவிகளும் படிக்கப்படிக்க இனித்துக்களிப்பிக்கும்
சொன்னலமும் பொருணலமும் அணிநலமுங் கொண்டுள்ளனவே
இவ்வாறமைந்த நூல்களும் தனிப்பாக்களும் ஒருங்கே தொகுக்
பெற்று பிரபந்தத்திரட்டு, சந்திரவிலாசம், தனிச்செய்யுட் கோவ
என மூன்று பிரிவுகொண்ட ஒருபுத்தகமாக ராயல் உயர்ந்த கிளே
கடிதத்தில் நல்ல எழுத்தில் சுத்தப்பிரதியாக அச்சிட்டு நயம்கலிக்
பயின்டுசெய்விக்கப் பெறுகின்றது. உத்தேசம் 300 பக்கத்தி
மேலாகும். இவ்வாறே இவ்வரியகாரியத்தை முடிக்கும் உத்தம
ஷராவார் மதுரை ஜில்லா மார்க்கயன் கோட்டை வாசியும் தம
வல்லுநரும் செல்வநலத்தாற் சிறந்த தேசாபிமானியும் செந்தமி
கவிபாடுந் திறமை வாய்ந்தவருமான ஸ்ரீமாந் எம். பி. பழநிச்ச
யாசாரியாரவர்களே. புத்தகம் வேண்டுவோர் அவ்விடத்தேனும் எ
கேனும் அறிவித்து வி-பி-பி-மூலம் பெற்றுக்கொள்ளலாம். புத்த
1-க்கு விலை ரூ 2. தபால் சார்ஜ் பிரத்தியேகம்

இங்ஙனம்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்

விவேகபாநுப்பிரஸ்

மதுரை.